மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 14 சனிக்கிழமை (26.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

# பிலியந்தலயில் நேற்றிரவு பஸ்ஸினுள் குண்டுவெடிப்பு

## 24 பேர் பலி; 52 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலயில் உள்ள பஸ் நிலையத்தில் தரித்து நின்ற பஸ்ஸினுள் நேற்றிரவு 6.45 மணியளவில் குண்டு வெடித்தது.

இச் சம்பவத்தில் 24 பேர் உயிரிழந்தனர். 52 பேர் படுகாயமடைந்தனர். பிலியந்தலயிலிருந்து ககபொல செல்வதற்காக நின்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸினுள்ளேயே இக் குண்டு வெடித்துள்ளது. *(10 ஆம் பக்கம் பார்க்க)*



குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பஸ்

## திடீர் விமானத்தால் கொழும்பில் பதற்றம்

(கொழும்பு)

கொழும்பு நகருக்கு மேலாக திடீரென விமானம் ஒன்று பறந்ததைக் கண்ட பொது மக்கள் பதற்றமடைந்து ஓடினர். கொழும்பு மத்திய பகுதியில் அமைந்துள்ள உயர் தொடர் மாடிக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இரவு பணியிலிருந்த பணியாளர்கள் சிலர் விமானம் ஒன்று பறந்து செல்வதை அவதானித்தனர்.

அப் பகுதியில் விமானம் எதுவும் அந் நேரத்தில் பறப் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இரணைமடுவில் நேற்று விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சி இரணைமடு காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம் ஒன்றின் மீது நேற்றுக் காலை விமானப்படையின் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வான்வழி மற்றும் தரைவழி புலனாய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் காலை 9.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## மடுப் பகுதியை மீட்டுள்ளதாக இராணுவம் நேற்று அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் மடுத்தேவாலயப்பகுதியை தாம் மீட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். எனினும் விடுதலைப் புலிகள், சர்வமத அமைப்பின் வேண்டுகோளை ஏற்று அங்கிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டது.

மடுத்தேவாலயச் சுற்றாடலை போரற்ற பகுதியாக பிரகடனப்படுத்துமாறு சர்வமத அமைப்பு, விடுதலைப் புலிகளிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து நேற்றுமுன்தினம் நண்பகலுடன் மடுத் தேவாலய வளாகத்திலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் அங்கிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிவிட்டதாக மன்னார் ஆயர் இல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் இதுவரை உத்தியோக பூர்வமான எந்த அறிவித்தலும் விடுதலைப் புலிகளிடமிருந்து தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தற்போது இடம்பெயர்ந்து தேவன் பிட்டி வளாகத்தில் தங்கியிருக்கும் மடு மாதா ஆலய அருட்தந்தை, விடுதலைப்புலிகள் வெளியேறி *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## நாவலர் வீதியூடான போக்குவரத்து சுமார் ஒரு மாத காலத்துக்கு தடை!

### மாற்றுப்பாதை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனரமைப்பு வேலைகள் காரணமாக யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவலர் வீதி, ஏப்ரல் 28ஆம் திகதி தொடக்கம் மே 25 ஆம் திகதி வரையான சுமார் ஒரு மாத காலத்துக்கு மூடப்பட்டிருக்கும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநகர சபை ஆணையாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவலர் வீதியில் புனரமைப்பு வேலைகளை துரிதமாக *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## ஆட்டுப்பட்டித் தெருவில் கிளைமோர்க் குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் விசேட அதிரடிப் படையினர், நேற்று மாலை 4.30 மணிக்கு கிளைமோர்க் குண்டு ஒன்றைச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள பழைய டச் தேவாலயத்திற்கு அருகில் காணப்பட்ட பொதி ஒன்றிலேயே கிளைமோர்க் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட *(10 ஆம் பக்கம் பார்க்க)*






வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் விசேட விலைக் கழிவு

பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள், பேப்பர் வகைகள் உட்படப் பல பொருள்கள்

யாழ்.மொத்த விலையில் 20% - 30% வீதக் கழிவு விலையில் (கொழும்பு விலையில்) பெற்றுக் கொள்ளலாம்.

'போஸ்கோ' 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

முழுமையாக விற்றுத் தீர்த்தல்! உடன் விரையுங்கள்...!

(உ-1069)

## சுவிஸ் நாடாளுமன்றம் முன்பாக இன்று கவன ஈர்ப்புப் போராட்டம்

(பேர்ண்)

சுவிஸ் தலைநகர் பேர்ணில் உள்ள சுவிஸ் நாடாளுமன்றத்திற்கு முன்பாக இன்று கவனஈர்ப்புப் போராட்டம் நடத்த உள்ளதாக சுவிஸ் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு. கருணாரட்ணம் அடிகளாரின் படுகொலை, மடு மாதா தேவாலயம் மீதான தாக்குதல் உள்ளிட்டவற்றை கண்டித்து இக்கவன ஈர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. சுவிஸ் நாடாளுமன்றம் முன்பாக பிற்பகல் 3.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை இப்போராட்டம் நடைபெறும். (ச-5)

# காயமடைந்த படையினரைச் சந்திக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

முகமாலை களமுனையில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் படையினரைச் சந்திக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரும் படையினரை புகைப்படம் எடுக்கச்சென்ற போது தாங்கள் அரசாங்க அதிகாரிகளால் தடுக்கப்பட்டதாக 4 புகைப்பட ஊடகவியலாளர்கள் எம்மிடம் தெரிவித்தனர். மருத்துவமனைக்குள் ஊடகவியலாளர்கள் சென்று புகைப்படம் எடுத்து களமுனை பாதிப்புக்களை வெளியிடுவதில் எதுவித பிரச்சினையும் இல்லை.

வடபோர் முனைக்களத்தில் இந்த வாரத்தின் தொடக்கத்தில் நடைபெற்ற தீவிர மோதலில் நூற்றுக்கணக்கில் படைத்தரப்பு இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

அரசாங்கத்தின் இராணுவப் பேச்சாளர்கள் அனைவருமே கள இழப்புக்களை மிகவும் குறைத்து அரசாங்க தரப்பு தகவல் களையே வெளியிடுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

கொழும்பிலிருந்து செயற்பட்டுவரும் சில வெளிநாட்டு செய்தி ஊடகங்களும் சில செய்தி இணையத்தளங்கள் மட்டுமே களமுனை இழப்புக்களை சுயாதீனமாக வெளியிட்டுள்ளன.

இராணுவத்தரப்பு தகவல்களின்படி 2008ஆம் ஆண்டு மட்டும் 3 ஆயிரம் விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 6 மாதங்களுக்கு முன்பாக இராணுவத்தளபதியோ 3 ஆயிரம் விடுதலைப் புலிகள்தான் இருப்பதாக கூறியிருந்தார். இலங்கையில் போர்க் களத்தில் நாளாந்தம் களமுனை இழப்புக்களே முதலாவது பலியாகிக் கொண்டிருக்கிறது என்பதையே இது நிரூபிக்கிறது.

ஊடகவியலாளர்களுக்கு தடைகளை விதித்து நடைபெற்றுவரும் போர் தொடர்பிலான செய்திகளை மக்களை சென்றடைவது சீர்குலைக்கப்பட்டு வருகிறது.

உண்மையான விபரங்களை போர்க்களத்தில் அறிவதற்கு விடுதலை புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் அனுமதிக்கவில்லை. போர்க்கள செய்திகளை சுயாதீனமாக சேகரிக்க ஊடகங்களை அனுமதிக்க வேண்டும் என்று எமது சுதந்திர ஊடக இயக்கம் 15 ஆண்டுகாலமாக போராடி வருகிறது.

தகவல் அறியும் உரிமைக்கு அரசாங்கமும் புலிகளும் மதிப்பளிக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## ST.JOHN'S COLLEGE JAFFNA

185TH ANNIVERSARY AND PREFECTS CENTENARY CELEBRATION

2nd & 3rd May 2008

| | |
|---|---|
| **1st Day** | **02nd May 2008** |
| EXHIBITION | 9.00am to 3.30 pm |
| **2nd Day** | **03rd May 2008** |
| 7.45 am | Laying Floral Wreaths on the tombs of the late Principals |
| 8.15 am | Holy Communion Service |
| 9.30 am to 12.00 noon | Exhibition |
| 9.30 am | Tree Planting |
| 10.00 am | Prefects Group Photograph (Past & Present SJC) |
| 3.00 pm to 5.00 pm | Cultural Show |
| 4.30 pm to 5.15 pm | Soccer Match - SJC Prefects Vs Central Prefects |

*All are welcome*

*(Past members of the Prefects' Guild will please register your names at the College Office to confirm your participation before Wednesday the 30th of April 2008)*

PRINCIPAL

(C-1061)


## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(பருத்தித்துறை)

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி பருத்தித்துறை இலங்கைவங்கி, பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து நடாத்தும் 20 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் பி.ஆனந்த நடேசன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக தலைவர் ஆகியோர் இச்சுற்றுப்போட்டியை ஆரம்பித்து வைக்கின்றனர்.

வடமராட்சியை சேர்ந்த 19 விளையாட்டு கழகங்கள் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

இன்று காலை மைக்கேல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் சிவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டு கழகமும் மோதுகின்றன. (ச-52)

## 'பிரபாகரன்' திரைப்படம் நேற்று வெளியிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் 'பிரபாகரன்' என்ற சிங்களத் திரைப் படத்தை நேற்று வெளியிட்டுள்ளதாக தயாரிப்பாளர் சமன் சந்திரிகே தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள ஜெமினி ஆய்வு கூடத்தில் இந்தப் படத்தின் மூலப் பிரதிச்சுருள் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபோதிலும் இத்தாலியில் வைத்து சுமார் 16 பிரதிகள் தயாரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படம் வெளிநாடுகளில் நாளை முதல் ஆங்கில உப தலைப்புடன் வெளியிடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-2)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்,

சர்வசித்து ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தோராம் நாள் (03.04.2008) அதிகாலை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்**

[யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் (முன்பள்ளி), இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளரும்]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.


அத்தருணம். தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

40/2, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(C-1058)

இலங்கை வங்கி யாழ்.மேற்தரக் கிளையில் புதுவருட தினத்தன்று நடைபெற்ற விழாவின்போது வங்கி முகாமையாளர் ஆர்.விஜயசிங்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும் ஆசியுரை வழங்கிய வண. பிதா சில்வஸ்ரர், ஸ்ரீ.லை.சுப்பிரமணிய குருக்கள், இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## ஈரான்-இலங்கைக்கு இடையே அணுசக்தி தகவல் பரிமாற்றம்

(கொழும்பு)

ஈரான்-இலங்கைக்கு இடையே அணுசக்தி தகவல் பரிமாற்றம் நடைபெற்றுள்ளதாக இலங்கை மின்சார சபை உயரதிகாரியான உதயசிறி காரியவசம் மறைமுக உறுதி செய்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இம்மாத இறுதியில் இலங்கை வரும் ஈரானிய ஜனாதிபதி மொகமட் அகமத் நியாத்தியிடம் அணுசக்தி உற்பத்தி தொடர்பான வாய்ப்புக்கள் குறித்து ஆராயப்படும் என்றும் உதயசிறி காரியவசம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் வழியில் பாகிஸ்தானிலும் உயரதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ள அகமத் நியாத், தெற்காசியப் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கையில் தனது அணுசக்தி உற்பத்தியை தொடங்கும் எண்ணத்தை வைத்திருக்கிறார் என்றும் உதயசிறி காரியவசம் கூறியுள்ளார்.

இதனிடையே கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சரவை பேச்சாளர் அநுர பிரியதர்சன யாப்பா அணுசக்தி உற்பத்தி தொடர்பாக ஆராயவில்லை என்று மறுத்துள்ளார். (ச-5)

## யாத்திரை தலத் திருவிழா

(அரியாலை)

அரியாலை தூய யூதா ததேயு யாத்திரைத் தலத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இத் திருவிழாவிற்கான இறுதி ஆயத்த நாளாகிய இன்று மாலை 3.45 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை வழிபாடு ஆரம்பமாகும். திருநாட் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும். (ச)

# இன்று ஒரு தகவல்

## உடல் மொழி

ஒரு மனிதர் யாருடனோ தொலைபேசியில் பேசிக்கொண்டிருப்பதை தூரத்திலிருந்து கவனிக்கிறோம். அவர் பேசுகிற வார்த்தைகள் காதில் விழவில்லை. ஆனாலும் அவர் பேசிக்கொண்டிருப்பது நல்ல செய்தியா? கெட்ட செய்தியா? என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது. மகிழ்ச்சி யான செய்திகளைப் பேசும்போது முகம் மலருகிறது. புன்னகை அரும்புகிறது. இதில் ஒன்றை நீங்கள் கவனிக்க் வேண்டும். தொலைபேசியிலே நாம் பேசுகிற பொழுது நம்மோடு பேசுகிறவர் எதிரே இல்லை.

அவர் தொலைபேசி வாயிலாக நமது குரலை மாத்திரம் தான் கேட்கிறார். நமது முகத்தைப் பார்க்கப் போவதில்லை. அப்படியிருந்தும் நமது முகம் ஏன் மலர வேண்டும்? இதைத்தான் உடல் மொழி (BODY LANGUAGE) என்று சொல்கி றார்கள். நம்மை அறியாமலே நமது உடம்பு செய்திகளைத் தெரிவித்திருக்கிறது பாருங்கள் – அதுதான் உடல் மொழி!

ஒருவர் தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பதை தூரத்திலிருந்தே கவனித்து, அவர் நண்பரோடு பேசுகிறாரா? மேலதிகாரிகளிடம் பேசுகிறாரா? குழந்தையோடு பேசுகிறாரா? அல்லது அவருக்குக் கீழ் பணியாற்றுகிறவர்களுடன் பேசுகிறாரா? என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதற்குக் காரணம் அவருடைய "உடல்மொழி". இந்த "உடல்மொழி" கூட நமது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குப் பயன்படும். இதுபற்றியெல்லாம் சில நிபுணர்கள் ஆராய்ந்திருக் கிறார்கள்.

ஒருவர் தன்னுடைய நாற்காலியிலே கிட்டத்தட்ட படுத்துக் கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்றால், எதிரே இருப்பவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்! தலையைச் சொறிந்து கொள்வது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப் போட்டு உட்காருவது, களைப்பாகக் கை விரல்களைப் பின்னிக்கொள்ளவது, அடிக்கடி கடிகாரத் தைப் பார்ப்பது – இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டி ருக்கிறார் என்றால்... நாம் கூடிய விரைவில் அந்த இடத்தை விட்டு எழுந்து வந்து விடுவது நல்லது. ஏனென்றால் இவை யெல்லாம் அவருடைய சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை என்ப வற்றுக்கு அடையாளம். நம்முடைய பேச்சு அவரைச் சலிப்படைய வைத்துவிட்டது என்று பொருள். நம்முடைய பேச்சில் அவருக்கு ஆர்வமில்லை என்பதற்கு அடையாளம்!

அதேநேரத்தில் நாற்காலியின் நுனியிலே அமர்ந்து, உடலை முன்னுக்கு நகர்த்தி எதிரே இருப்பவரின் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி, அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி, உங்கள் மீது மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும். நாம் எப்படிப்பட்டவர் என்பதை நமது உடம்பும், நடை,உடை ,பாவனையும் அடுத்தவர்களுக்கு காட்டிக் கொடுத்து விடும். இளைஞர்களே! உங்கள் உடம்பு, உங்கள் பார்வை, நடை, உட்காரும் விதம் இவற்றை வைத்துக்கொண்டே நீங்கள் பொறுப்பானவரா? மரியாதை தெரிந்தவரா? அடக்கமானவரா? நம்பிக்கைக்கு உரியவரா? நாணயமில்லாதவரா? பயந்தவரா? திறமைசாலிகளா? அப்பாவியா? என்பதைக்கண்டு பிடித்து விட முடியும். ஆகவே, இந்த உடல் மொழியை புரிந்துகொண்டு நம்மை கொஞ்சம் சரிப்படுத்திக் கொண்டு விட்டால் வாழ்க்கையில் சுலபமாகப் பல காரியங்களைச் சாதித்து விடலாம்.

ஒரு மனநல மருத்துவமனை! அங்கே ஒருவர் ஒரு நாற்காலியில் உடர்கார்ந்து கொண்டு கார் ஓட்டுவது மாதிரி பாவனை செய்து கொண்டிருந்தார். ஸ்டியரிங்கைத் திருப்புவது மாதிரி, பின்னால் வருகிற வண்டியை நிற்கச் சொல்வது மாதிரி, இவர் ஒதுங்கிக் கொண்டு அவருக்கு வழிவிடுவது மாதிரி... இப்படியெல்லாம் சேட்டைகள் செய்து கொண்டிருந்தார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் பக்கத்திலே இருந்த இன்னொருவரிடம் கேட்டார். "இவர் ஏன் இப்படிச் செய்கிறார்?"

இவருக்கு கார் ஓட்ட வேண்டும் என்ற ஆசை. அது நிறைவேறாமல் போனதால் இப்படிச் செய்கிறார். நீங்கள் சொல்லக் கூடாதா? நீங்கள் இப்பொழுது காரில் இருக்கவில்லை. வெறும் நாற்காலியிலே தான் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று சொல்லக் கூடாதா? அது முடியாத காரியம் ஏனென்றால் அவர் ஓட்டும் காரை கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு பத்து ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறாரே? அதை கெடுக்கலாமா? என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தனியார் துறை ஊழியர்களுக்கு மே மாதம் முதல் 20வீத சம்பள அதிகரிப்பு வழங்க நடவடிக்கை

### அமைச்சர் அதாவுட செனவிரத்ன அறிவிப்பு

அதிகரித்துச்செல்கின்றவாழ்க்கை செலவைக் கருத்தில்கொண்டு தனியார் துறை ஊழியர்களுக்கு மேமாதம் முதல் 20 வீத சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பில் தனியார் நிறுவன உரிமையாளர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றது என்று தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பாக மே மாதம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசாங்கத்தின் அறிவிப்பின் பிரகாரம் தனியார் துறை ஊழியர்களுக்கு கடந்த வருடம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. தனியார் துறையினரின் அடிப்படைச் சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவாக உயர்த்தியதும் எமது அரசாங்கமே என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ-5)

# உணவுப்பொருள் விலை அதிகரித்தாலும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படும்

### -அரசாங்க அதிபர்



உலக உணவுத் திட்டத்தினால்பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படும்செயற்பாட்டில், முடிவடைந்த முதலாம் தவணையின் பின்னர் பாடசாலையில் உள்ள உணவுப்பொருள் கையிருப்பு விபரம் சேகரிக்கப்படுவதுடன் இரண்டாம் தவணைக்குரிய உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

உலக சந்தையில் உணவுப் பொருட்களின் விலை மூன்று மடங்காக உயர்வடைந்துள்ள வேளையிலும் இத்திட்டம்தொடர்ந்தும்மேற்கொள்ளப்படும். இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதி காரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு அவசியம். இவ்வாறு 24 ஆம்திகதி யாழ். செயலகத்தில் உலக உணவுத் திட்ட இணைப்பாளர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள், கலந்துகொண்ட பாடசாலைமாணவர்களுக்குகாலை உணவு வழங்கல் சம்பந்தமான கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவிததார்.

அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களுக்கென வழங்கப்படும் உணவுப் பொருட்களில் ஊழல்,மோசடி என்பவற்றில் யாரும் ஈடுபடக்கூடாது எனவும், அவ்வாறு யாரும் ஈடுபடுவார்களானால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார். அத்துடன் பாடசாலைகளுக்கான உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது வேறு பாடசாலைகளுடன் மாற்றிக் கொள்வதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

பாடசாலை தங்களுக்குத் தேவையானவற்றை தங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பணத்தில் கொள்வனவு செய்யவேண்டும். ப.நோ. கூட்டுறவுச் சங்கத்துடன் உணவுப்பொருட்களை எக்காரணம் கொண்டும் மாற்றிக் கொள்ளக்கூடாது.

**பதிவேடுகள் பேணல்**

தினசரி பாடசாலைகளில் வழங்கப்படும் உணவுப்பொருட்களுக்கான பதிவேடு பேணப்படவேண்டும். இதில் ஒவ்வொரு நாளும் பாவிக்கும் பொருட்கள் பதியப்படவேண்டும். வாரத்திற்கு ஒருமுறை அதிபர் மற்றும் அதிகாரிகளால் இப் பதிவேடுகள் பரிசீலனை செய்து முதலொப்பமிடுதல் வேண்டும். சமையல் தொண்டர்களுக்கு வழங்கும் பொருட்களுக்கும் தனியான பதிவேடுகள் பேணப்பட்டு பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தி அவர்களிடம் கையொப்பம் அல்லது இடது கைப்பெருவிரல் அடையாளம் பெறப்படல்வேண்டும்.

எக்காரணம் கொண்டும் சமையல் தொண்டரின் உணவினை நிறுத்தக் கூடாது. அடிக்கடி உலக உணவு ஸ்தாபனத்துடன்அல்லதுஅபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்வு வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு தவணையிலும்மாணவரின் (தரம் 1முதல் தரம் 9 வரை) சரியான எண்ணிக்கை வழங்கப்படல் அவசியமாகும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் நான்கு பாடசாலைகளுக்கு சென்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அதன்போது பாடசாலைகளின் உணவுக் கையிருப்பை உறுதிப்படுத்த வேண்டும். யாழ்.செயலகத்தினால் உணவுவழங்கற்கட்டளைகள்வழங்கப்பட்டதும் அபிவிருத்தி உத்தியோகத்தர், ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்தெரிவித்தார். (ஓ-19)

# மடு தேவாலயத்திற்கான சகல வழிகளும் மூடப்பட்டுள்ளன

மடு தேவாலயப் பகுதியில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருப்பதனால் மடு தேவாலயத்திற்கான சகல வழிகளும் மூடப் பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மடு பிரதேசத்திற்குத் தெற்காக 600 மீற்றருக்கு அப்பாலும், வடக்கிற்கும் கிழக்கிற்கும் தலா இரண்டு கிலோமீற்றருக்கு அப்பாலும் படையினர் நிலைகொண்டுள்ளனர். மேற்கில் மடு தேவாலயம் இருப்பதனால் படையினர் அந்தப் பகுதியில் நிலை கொள்ளவில்லை.

இதேவேளை, வவுனியா, வெலிஓயா, முகமாலை, மன்னார் ஆகிய பகுதிகளிலும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. அந்த மோதல்களின் போது எட்டுப் புலிகள் கொல்லப்பட்டதுடன், பெருந்தொகையான ஆயுதங்களும் தொலைத் தொடர்புக் கருவிகளும் மீட்கப்பட்டுள்ளன. (அ-5)

# இராசிபலன்

26.04.2008
(சித்திரை 14, சனிக்கிழமை)
ஷஷ்டி பின்னிரவு 02.32 மணிவரை
பூராடம் பின்னிரவு 05.42 மணிவரை
இராகுகாலம் 08.59-10.29 மணிவரை
சுபநேரம்-02.59-04.29 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |
| இடபம் | வீண்பகை, காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு, பொருள்விரயம். |
| மிதுனம் | களஸ்திரநன்மை, தேகநலன், முயற்சி கைகூடும், சத்துருஜெயம். |
| கடகம் | எடுத்தகாரியம் கைகூடும், உற்சாகம், பொருள்சேர்க்கை, மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | கௌரவக்குறைவு, தொழில் மந்த நிலை, குடும்பக்கவலை, பணக் குறைவு. |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு, உறவினர் சந்திப்பு, உடல்நலக் குறைவு, தொழில் ஆரம்பம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், உறவினர் வருகை, கீர்த்தி. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், மனோசங்கடம், தனவிரயம், போசனசுகக்குறைவு. |
| தனுசு | நல்லமுயற்சி, தெய்வசிந்தை, சயனசுகம், தேகநலன். |
| மகரம் | சோம்பல் நிலை, புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரிய சித்தி, போசனசுகம், உடல்நலம். |
| மீனம் | தூரதேசச்செய்தி, நன்கொடை, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |

வளவன்

# உயிரியல் ஒலிம்பியாட் போட்டி

(கொழும்பு)

இலங்கை உயிரியல் நிறுவகம் (Institute of Biology), இலங்கைப் பல்கலைக்கழகங்களினதும் கல்வி அமைச்சினதும் அனுசரணையுடன் முதற் தடவையாக 2008 ஆம் ஆண்டில் இலங்கை உயிரியல் ஒலிம்பியாட் (Sri Lanka Biology Olympiad) போட்டியொன்றை நடத்தவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றி உயிரியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமது அறிவையும் திறமைகளையும் வெளிக்காட்டி பதக்கங்களை வென்றெடுக்குமாறு உயர்தர வகுப்பு மாணவர்களை இலங்கை உயிரியல் நிறுவகம் அழைக்கின்றது.

2008 அல்லது 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை அல்லது இங்கிலாந்து க.பொ.த.உயர்தர பரீட்சையில் தோற்றவிருப்பவர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். இலங்கை உயிரியல் ஒலிம்பியாட்டில் போட்டியிடுபவர்களுக்கு வயதெல்லை கிடையாது. ஆனால் அடுத்து நடைபெறவிருக்கும் சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றுபவர்கள் 2008 ஜூன் 30ஆம் திகதி 20 வயதிற்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை 2008 ஏப்ரல் 30 ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை உயிரியல் நிறுவகம், வித்தியா மந்திரய, வித்யா மாவத்தை, கொழும்பு - 07 என்ற விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இலங்கை உயிரியல் ஒலிம்பியாட் யாழ்ப்பாண இணைப்பாளரான பேராசிரியர் இ.குமாரவடிவேல் (விஞ்ஞான பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (ஓ)



தாவடி இந்துத் தமிழ்க் கலவன் வித்தியாலய ஆய்வுகூடத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வை வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி க.தேவராசா, வித்தியாலய அதிபர் சு.சண்முக குலகுமாரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.


## யாழ்.மாவட்டத்தில் 34 பாடசாலைகளில் சமையல் அறை அமைக்கத் திட்டம்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் 34 பாடசாலைகளுக்கு சமையல் அறை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இவ்வறையின் நீள அகலம் முறையே 15 அடி, 10 அடி அமையுமிடத்து இதற்கான செலவு ஒரு இலட்சத்து 86 ஆயிரம் ரூபா என தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதே அளவில் கட்டுவதானால் ரூபா 61 ஆயிரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் செலவிட வேண்டியேற்படுமென்பதால், தற்போது அதன் அளவைக் குறைத்து 10 அடி X 11 அடி கொண்ட அளவில் சமையல் அறையை அமைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு 1 இலட்சத்து 31 ஆயிரம் போதுமானதெனவும், அத்துடன் ஏற்கனவே உலக உணவுத் திட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட 500 மனிதநாள், உணவுப் பொருட்களும் இதற்காக வழங்கப்படும் எனவும் யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-19)

## சிறப்புச் சொற்பொழிவு

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினரால் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடப்புலம் நரசிங்க வைரவ ஆலய மஹோற் சவ காலங்களில் நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவுகளின் ஒழுங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை "திருமுறையும் வாழ்வும்" எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவசித் தாந்த பண்டிதர் கந்த சத்திதாசனும், நாளை மறுதினம் திங்கட்கிழமை "இறைவனை எந்நாளும் நினைப்போர்க்கும் துன்பமில்லை" எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் நித்திய தசிதரனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (அ-7)




## முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் விழா

வலிகாமம் மேற்கு பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சித்தன்கேணி, சிவன் கோவில் தெற்கு வீதியிலுள்ள வலி மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினால் வலி.மேற்கு பிரதேச முன்பள்ளிகள் இணைப்பாளர் செல்வி நா.நிரஞ்சனா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (அ-7)

## துரையப்பா விளையாட்டு அரங்கை மக்கள் பாவனைக்குவிடும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை, யாழ். வர்த்தக சம்மேளனம், யாழ்.மாவட்ட செயலகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கை மக்கள் பாவனைக்கு விடும் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக இணுவில் உதயநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். தொடர்ந்து திருமறைக் கலா மன்றத்தினரின் கலைநிகழ்வுகள் இடம் பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகி நடைபெறும். இதேவேளை காலை தொடக்கம் மாலை வரை வர்த்தக நிலையங்களின் மலிவு விற்பனை இடம்பெறவுள்ளன. உணவுப் பொருட்கள் உட்பட பாவனைப் பொருட்கள் விற்பனைக்கு விடப்படும். கலை இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவ னங்களைச் சார்ந்தவர்களும் வருகை தருமாறு அழைக்கப்படுகிறார்கள் என யாழ்.அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## விளையாட்டுப் போட்டி

யாழ்.மாவட்டப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் 17, 19 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில், வரும் 28,29,30 ஆகிய திகதிகளிலும் 15,17,19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் மே மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலை விளையாட்டுச் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (ஓ)

## சடலங்களை அடையாளம் காணுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியிலிருந்து வந்து இதுவரை அடையாளம் காணப்படாத 3 ஆண்களினதும் 3 பெண்களினதும் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து உரித்துடையோர் 5 நாட்களுக்குள் இச்சடலங்களை அடையாளம் காணும்படி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

## 'சொர்க்கத்தின் குழந்தைகள்' நாடக நிகழ்வு

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் யாழ். மாவட்டத்தில் சிறுவர்களுக்கான செயல் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயல்திட்டங்கள் பின்தங்கிய கிராம சிறுவர்களை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன. சிறுவர்களின் கல்வி, உளமேம்பாடு போன்றவற்றின் ஓர் அம்சமாக சிறுவர் கழகங்களை அமைத்தல், சிறுவர்களின் ஆற்றல் மேம்பாட்டுக்கான களங்களை அமைத்தல் போன்ற செயல் திட்டங்கள் நடைபெறுகின்றன.

இதன் ஒரு அம்சமாக சிறுவர் பாதுகாப்பு நிறுவன அனுசரணையுடன் செயல்திறன் அரங்க இயக்கம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளும் சிறுவர் கழகங்களுக்கான உள மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் ஒரு நிகழ்வாக மாதகல் "இளந்தளிர் சிறுவர் கழகமும்" சகாயபுரம் "மலரும் மொட்டும் சிறுவர் கழகமும்" இணைந்து "சொர்க்கத்தின் குழந்தைகள்" எனும் தலைப்பிலான நாடக நிகழ்வை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் நடாத்தவுள்ளனர். இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி கூட்டிணைப்பாளர் திருமதி.பொன்மதி சிவகுமாரன் பிரதம விருந்தினராகவும் சென் ஜோசப் மகாவித்தியாலய அதிபர் வி.நடராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் சிறுவர்களின் உளமேம்பாடு என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட "கொடுவீச்சு", "ஒற்றுமையின் சின்னம்" என்ற இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. இந் நாடகங்களை செயல்திறன் அரங்க இயக்கத்தைச் சேர்ந்த அரங்கச் செயலாளிகள் தயாரித்து நெறிப்படுத்தியுள்ளனர் என செயல்திறன் அரங்க இயக்க திட்டப் பணிப்பாளர் க.சுபாஜினி அறிவித்துள்ளார். (ஓ)

## முதியோருக்கு முன்னுரிமை வழங்க அறிவுறுத்தல்

(சாவகச்சேரி)

முதியோர் நலனைப் பேணும் வகையில் முதியோர் அடையாள அட்டையுடன் வரும் முதியோருக்கு திணைக்களங்களிலும் மற்றும் பொதுச் சேவைகளிலும் முன்னுரிமை வழங்குமாறு திணைக்களத் தலைவர்களை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் முதியோர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ் முதியோர் அட்டையுடன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அலுவலகங்களில் அவர்களுக்கான சேவையினை காலந் தாழ்த்தாது செய்துகொடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-5)

## சான்றிதழ் வழங்கலும் நூல் வெளியீடும்

Alliance Francaise de Jaffna இன் மூலம் நடாத்தப்பட்ட பிரெஞ்சு மொழிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அதனைத்தொடர்ந்து பிரெஞ்சு மொழிக் கவிஞர்களின் கவிதை மொழிபெயர்ப்பு நூலான "விசிறி -20 ஆம் நூற்றாண்டின் மூன்று பிரெஞ்சு கவிஞர் கள்" எனும் நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு Alliance Francaise de Jaffna இல் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி என்.கிருஷ்ணவேணி கலந்துகொள்ளவுள்ளார். (அ-6)

## உலக சமாதான தின சிறுவர் சித்திரப் போட்டிகள்

உலக சமாதான தின சிறுவர் சித்திரப் போட்டியில் மருதங்கேணிக் கோட்டத்தில் தரம் IV இல் அம்பன் அ.மெ.த.க. பாடசாலையைச் சேர்ந்த வ.விதுஷன் முதலிடத்தைப் பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விதை நெற் களஞ்சியம் திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் 10 இலட்சம் ரூபா செலவில் விதைநெல் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி - புத்தூர் சந்தி கமநல சேவை நிலையத்திலேயே இவ் விதைநெல் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விதை நெல் களஞ்சிய திறப்புவிழா வைபவம் யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் இவ் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விதைநெல் களஞ்சியத்தினைத் திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் தென்மராட்சிப் பிரதேச விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-5)

## யாழ்.இலக்கிய வட்டத்தின் அஞ்சலி, வெளியீடு, விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டம், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் செங்கை ஆழியான் க.குணராசா தலைமையில், நினைவு அஞ்சலி, நூல் வெளியீடு, விருது வழங்கல் நிகழ்வுகளை நடாத்த உள்ளது. இதில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புரை வழங்குவார். முதலாவது நிகழ்வான நினைவு அஞ்சலியில், அமரர் இலக்கிய கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தரின் நினைவுப் பேருரையை கவிஞர் சோ.பத்மநாதனும், அமரர் த. வேலுப்பிள்ளையின் நினைவுப் பேருரையை கலாநிதி செ.திருநாவுக்கரசும் வழங்கவுள்ளனர்.

இரண்டாவது நிகழ்வில் க.தெய்வேந்திரன் (கோபதி) கோபதியின் கதைகள் எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் இ.சங்கரினால் வெளியிட்டு வைக்கப்படும். கலாநிதி ஜெயலக்சுமி இராஜநாயகம் மதிப்புரை வழங்குவார். அத்துடன் கதாசிரியர் கௌரவிப்பும் இடம்பெறும்.

மூன்றாவது நிகழ்வாக 2006 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதி நூலாக தெரிவாகியுள்ள 'புதியவர்கள்' க.சட்டநாதனுக்கு கவிஞர் க.துரைசிங்கம் நாவேந்தன் விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். இதில் மெச்சுரையை ஐ.வரதராசன் வழங்கவுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இலக்கிய வட்டம் அறிவித்துள்ளது. (ஓ)

## மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத் தலைவர்களையும், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)





அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினரான ஊர்காவற்றுறை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், பாண்ட் அணித்தலைவரால் வரவேற்கப்படுவதையும், அருகில் கல்லூரி அதிபர் ஏ.பாலசுப்பிரமணியம், பிரதி அதிபர் க.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினரால் போட்டி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கிரேம் சிமித், யூசுப் பதான் அதிரடியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 'திரில்' வெற்றி

## சைமண்ஸ் சதம் வீணானது

(ஹைதராபாத்)

யூசுப் பதான், கிரேம் சிமித்தின் அதிரடி கைகொடுக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணிக் கெதிரான ஐ.பி.எல். இருபது -20 தொடரில் வோன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

இந்தியக் கிரிக்கெட் சபையால் ஆரம்பிக் கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக்கின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்கள் உள்ளடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இத் தொடரின் 9-வது லீக் சுற்று ஆட்டத்தில் நேற்று முன்தினம் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஸ்சமண்ஸின் விளாசல் சதத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 53 பந்துகளில் (11 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் உட்பட) 117 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யூசுப் பதான், ஷேன் வோர்ன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 215 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி கிரேம் சிமித், யூசுப் பதானின் அதிரடியால் 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 217 ஓட்டங்களை எடுத்து ஒரு பந்து மீதமுள்ள நிலையில் 3 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

இதில் சிமித் 45 பந்துகளில் (9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும் யூசுப் பதான் 28 பந்துகளில் (4பவுண்டரி, 6 சிக்ஸர்கள் உட்பட) 61 ஓட்டங்களையும் மற்றும் கைப் 34, வோர்ன் 22 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் அப்ரிடி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் யூசுப் பதான் தெரிவானார்.

ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தொடரில் விளையாடிய மூன்று போட்டிகளில் இரண்டில் வெற்றி பெற்று 4 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இதேவேளை லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி நாளை டெண்டுல்கர் தலைமையிலான மும்மை இந்தியன்ஸ் அணியுடன் மோதவுள்ளது.

இப்போட்டியில் முதலிரண்டு போட்டிகளிலும் பூரண உடற்தகுதி பெறாமையினால் ஆடாத டெண்டுல்கர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (5)



ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர்கள் வெற்றிக் களிப்பில்

## 5ஆண்டுகளின் பின் பாக்.செல்கிறது நியூ.

பாகிஸ்தான் செல்ல உள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி, அங்கு மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. எதிர்வரும் செப்ரம்பரில் நடைபெறவுள்ள ஐ.சி.சி சாம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கு முன்னதாக பாகிஸ்தான் செல்ல நியூஸிலாந்து திட்டமிட்டுள்ளது.

முன்னதாக பாகிஸ்தானில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்த நியூசிலாந்து குழு ஒன்று கராச்சி செல்ல உள்ளது.

பாகிஸ்தான் வருமாறு மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்படி அவர்கள் வரும்பட்சத்தில் முத்தரப்பு ஒருநாள் தொடரை நடத்தவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயாராகியுள்ளது

இதேவேளை, இந்தியாவும் இலங்கையும் பாகிஸ்தானில் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## எல்லாப் போட்டிகளையும் பார்க்கிறார் விஜய்



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட் சத்திர தூதர் நடிகர் விஜய், சென்னையில் நடக்கும் ஆட்டங்களை மட்டுமே நேரில் பார்ப் பார் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் சென்னையில் நடந்த முதல் ஆட்டத்தில் அவர் உற்சாகப் படுத்திய விதம் மற்றும் ரசிகர்களிடையே அவருக்கு கிடைத்த வரவேற்பை கண்ட அணி நிர்வாகம், சென்னை அணி விளையாடும் அனைத்து இடங்களுக்கும் அவரை அழைத்து செல்ல முடிபு செய்துள்ளது. தொடர்ந்து படங்களில் நடிக்க வேண்டி இருப்பதால் ஆட்டத்தை நேரில் பார்க்க தன்னால் வர இயலாது என்று மற்றொரு நட்சத்திர தூதர் நடிகை நயன்தாரா சொல்லி விட்டதால், விஜயை மட்டும் பயன்படுத்த அணி நிர்வாகம் முடிபு செய்திருக்கிறது. (5)

## புதிய அணுகுமுறை தேவை -லக்ஸ்மன்

(ஐதராபாத்)

தொடர்ந்து 3 தோல்விகளை கண்டுள்ள ஐதராபாத் அணி, இனி பந்துவீச்சில் புதிய அணுகுமுறையை கடைப்பிடித்தால்தான் வெற்றிபெற முடியும் என்று அதன் தலைவர் லக்ஷ்மன் கூறியுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளில் லக்ஷ்மன் தலைமையிலான ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தொடர்ந்து 3 ஆட்டங்களில் தோல்வியை தழுவியுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அந்த அணியின் தலைவர் லக்ஷ்மன் கூறியதாவது,

தொடர்ந்து தோல்வியை சந்தித்திருப்பது ஏமாற்றத்தை தருகிறது. பந்து வீசும் முறையில் மாற்றம் தேவை என்று உணர்கிறேன்.

அன்ரூ சைமன்ஸ் சிறப்பாக ஆடினார். ஆனால் அவரது பந்துவீச்சு சரியாக எடுபடவில்லை.

கடைசி ஓவரில் வோர்ன் அதிரடியாக ஆடியதால் தோல்வியடைந்தோம். இவ்வாறு அவர் கூறினார். (5)

## ஐ.பி.எல். இருபது-20 தொடர்

# அடுத்த வாரத்துடன் விடைபெறும் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து வீரர்கள்

(சென்னை)

ஐ.பி.எல். இருபது -20 கிரிக்கெற் போட்டி கடந்த வாரம் வெற்றிகரமாக ஆரம்பமாகியுள்ள நிலையில் 8 அணிகளிலும் இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலிய வீரர்கள் மே 1ஆம் திகதியும் நியூசிலாந்து வீரர்கள் ஏப்ரல் 30ஆம் திகதியும் நாடு திரும்புகிறார்கள். மே மாதம் அவுஸ்திரேலிய அணி மேற்கிந்திய தீவுகளுக்கும் நியூசிலாந்து அணி இங்கிலாந்திற்கும் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது.

எனவே அவுஸ்திரேலிய வீரர்கள் சைமண்ட்ஸ் (டெக்கான் சார்ஜர்ஸ்), பொண்டிங் (கொல்கத்தா நைட், ரைடர்ஸ்) பிரெட்லீ, கடிச் (கிங்ஸ் லெவின் பஞ்சாப்) ஹைடன் மைக்கெல் ஹஸி (சென்னை சூப்பர் கிங்ஸ்) ஆகியோர் அடுத்த வாரத்துடன் ஐ.பி.எல். அணியிலிருந்து விடுபடவுள்ளனர்.

இதேபோல் நியூசிலாந்து வீரர்கள் மெக்கலம் (கொல்கத்தா), ரோஸ் டெய்லர் (பெங்களூர்). ஓரம் (சென்னை), விக்டோரி (டெல்லி), மில்ஸ் (பஞ்சாப்) ஆகியோரும் விரைவில் விடை பெறுகிறார்கள். மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் மே மாதம் மத்தியில் புறப்படுகிறார்கள். அதே சமயம் இப்போது தென்னாபிரிக்க வீரர்கள் ஐ.பி.எல். அணியுடன் இணைந்து கொண்டு இருக்கிறார்கள். முன்னணி வீரர்கள் விடுபட இருப்பதன் மூலம் ஐ.பி.எல். போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது அடுத்த மாதம் தெரிந்து விடும் என்கிறார்கள் கிரிக்கெற் ஆய்வாளர்கள். (5)

## நட்சத்திர தூதர் பொறுப்பிலிருந்து நடிகை நயன்தாரா நீக்கம்

(சென்னை

நடிகை நயன்தாரா சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர தூதர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின்



உரிமையாளரான இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் அணியை ஊக்குவிக்கும் வகையில் நட்சத்திர தூதர்களாக நடிகர் விஜயையும் நடிகை நயன்தாராவையும் நியமித்தது.

ஒப்பந்தப்படி போட்டி நடைபெறும் நாட்களில் நட்சத்திர தூதர்கள் வீரர்களை உற்சாகப்படுத்தியும் அணி வெற்றி பெறசெய்யும் வகையிலும் ஊக்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

அந்த வகையில் சேப்பாக்கத்தில் நடைபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் போட்டியின்போது நடிகர் விஜய் கலந்து கொண்டு போனி தலைமையிலான சென்னை அணி வெற்றி பெற வேண்டும் என வாழ்த்தி பேசினார். மேலும் மைதானம் முழுவதும் வலம் வந்து ரசிகர்களை உற்சாகப்படுத்தி பாடல்களை பாடினார்.


ஆனால் மற்றொரு நட்சத்திர தூதரான நயன்தாரா போட்டி தினத்தன்று பங்கேற்காமலும் மேலும் அணிக்காக எந்தவிதமான முயற்சிகளும் எடுக்காமலும் அதற்குரிய விளக்கம் அளிக்காமலும் இருந்து வந்தார்.

இந் நிலையில் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர தூதர் பொறுப்பிலிருந்து நயன்தாரா நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீக்கம் குறித்து நயன்தாராவிடம் விளக்கம் கேட்க முயற்சித்தபோது அவரது கையடக்கத் தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்தது.

அவருக்கு நெருங்கிய வட்டாரங்களிடம் விசாரிக்கையில் ஐ.பி.எல் போட்டிக்கு ஒத்துழைக்க நயன்தாரா தயாராக இருந்ததாகவும் ஆனால் சரியான தகவல் பரிமாற்றம் இல்லாததால் சிக்கல் ஏற்பட்டதாகவும் மேலும் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மட்டுமே நயன்தாரா கையெழுத்திட்டிருந்ததாகவும் அதிலும் கூட சூட்டிங் இல்லாத நாட்களில் மட்டுமே பங்கேற்பது என்று திட்டவட்டமாக இருந்ததாகவும் அதையும் மீறி தற்போது இந்த நிகழ்வு நடந்திருப்பதால் எதுவும் சொல்வதற்கில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். (5)

## உன்னால் முடியும் தோழா!




சென்னை சிதம்பரம் அரங்கில் ரசிகர்களையும் வீரர்களையும் உற்சாகப்படுத்துவற்காக இசைக் கலைஞர் சிவமணியின் டிரம்ஸின் இசைக்கேற்ப ஆட்டம் போடுகிறார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள நடிகர் விஜய்.

# மத்திய கிழக்கு,ஆசிய பிராந்திய அமெரிக்காவின் இராணுவத் தலைவராக டேவிட் பெட்ரேயஸ் தெரிவு

(வோஷிங்டன்)

ஈராக்கிற்கான அமெரிக்க இராணுவ கட்டளைத் தளபதி ஜெனரல் டேவிட் பெட்ரே யஸ் அமெரிக்க மத்திய இராணுவ கட்டளைப் பிரிவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



ஈராக்கில் வன்முறைகளைத் தணிவிப்பது தொடர்பில் புதிய இராணுவ தந்திரோபாயமொன்றை நடைமுறைப்படுத்தியவர்களான அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரொபேர்ட் கேட்ஸ் மற்றும் இராணுவ அதிகாரி ஜெனரல் ரேமொன்ட் ஓடியர்னோ ஆகியோரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே இத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க மத்திய இராணுவ கட்டளை பிரிவானது ஈராக் ஆப்கானிஸ்தானிலான அனைத்து இராணுவ நடவடிக்கைகள் உட்பட ஆபிரிக்காவின் ஹோர்னிலிருந்து மத்திய ஆசியா வரையான இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவுள்ளது.

ஜெனரல் டேவிட் பெட்ரேயஸின் இந்நியமனம் நடைமுறைக்கு வர செனட் சபையின் அங்கீகாரத்தை பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன் அமெரிக்க மத்திய இரா ணுவ கட்டளைப் பிரிவின் தலைவராக பணியாற்றிய கடற்படையதிகாரி வில்லியம் பால்கொன் அவரது ஈரானிய கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் முரண்பாட்டை கொண்டிருப்பதாக அறிக்கையொன்று வெளிவந்ததையடுத்து கடந்த மார்ச் மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

எஸ்குயர் சஞ்சிகையில் த.மான் பிட்வீன் வார் அன்ட் பீஸ் என்ற தலைப்பில் வெளியான அறிக்கையில் இஸ்லாமிய குடியரசான ஈரான் மீது அதன் அணுசக்தி நடவடிக்கைகளுக்கு எதிராக படை பலத்தை பயன்படுத்துவதற்கு வில்லியம் பால்கொன் எதிர்ப்பு தெரிவித்து

**உலக தரிசனம்**

வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் உண்மையில்லை எனத் தெரிவித்த வில்லியம் பால்கொன் எனினும் குழப்ப நிலையை தவிர்க்குமுகமாகவே பதவி விலகத் தீர்மானித்ததாக கூறினார்.

ஜெனரல் டேவிட் பெட்ரேயஸின் நியமனம் குறித்து அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரொபேர்ட் கேட்ஸ் விபரிக்கையில்,

இந்த பதவிக்கு மிகப் பொருத்தமானவர் அவர் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் ஈராக்கில் மட்டுமல்ல ஆப்கானிஸ்தானிலும் அப் பிராந்தியத்தின் வேறு சில பகுதிகளிலும் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளோம் இத்தகைய சூழ்நிலையில் மேற்படி முயற்சிக்கு தலைமைதாங்குவதற்கு சிறந்த தகுதியுடையவராக அவரை தவிர வேறெவரும் அமெரிக்காவில் இருப்பதாக நான் உணரவில்லை என்று கூறினார்.

இந் நிலையில டேவிட் பெட்ரேயஸின் இடத்திற்கு அவரது அடுத்த கட்ட பதவி நிலையிலுள்ள இராணுவ அதிகாரியானரே ஓடியர்னோ நியமிக்கப்படவுள்ளார்.

இந்நியமனம் தொடர்பான சிபாரிசுகளுக்கு ஜனாதிபதி புஷ் அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந் நியமனம் சம்பந்தமான அங்கீகாரத்தை எதிர்வரும் மே மாத இறுதிக்குள் வழங்குமாறு அமெரிக்க வெள்ளை மாளிகைசெனட் சபையை கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் ஈரான், பாகிஸ்தான் மற்றும் ஏனைய 25 நாடுகளிலான அமெரிக்க செயற்பாடுகளை டேவிட் பெட்ரேயஸ் மேற்பார்வை செய்யவுள்ளார். (அ-5)

## பயணச்சீட்டு இன்றி புகைவண்டியில் பயணித்த முன்னாள் பிரதமர்

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் இப்போது மேற்கு ஆசியா பிரச்சினைக்கான ஐ.நா.தனித்தூதராக இருக்கிறார். இவர் புகையிரதத்தில் பயணச் சீட்டில்லாமல் பயணம் செய்து பிடிபட்டார். அத்தோடு பயணச் சீட்டு வாங்குவதற்கும் அவரிடம் பணம் இல்லா மல் போய் விட்டது. இந்தச் சம்பவம் ஹீத்ரு எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் சென்ற போது நடந்தது.

இந்த புகை வண்டியில் அவர் பயணச் சீட்டு வாங்காமல் ஏறிவிட்டார். இதில் பயணம் செய்பவர்கள் முன் கூட்டியே பயணச் சீட்டு வாங்க வேண்டிய அவசியம் இல்லை. பயணம் செய்யும் போது கூட பயணச் சீட்டு வாங்கிக் கொள்ள லாம். முதல் வகுப்பில் பிளேயர் பயணம் செய்தார். பயணச் சீட்டு பரிசோதகர் அவரிடம் வந்த போது தான் பயணச் சீட்டு வாங்குவதற்காக அவர் பைக்குள் கைவிட்டார். பையில் பணம் இல்லை வீட்டில் இருந்து புறப்படும் போது அவர் பணம் எடுத்து வரமறந்து விட்டார். இதனால் தர்ம சங்கடத்தில் அவர் நெளிந்தார் இதைப்பார்த்த சக பயணியொருவர் அவருக்கான கட்ட ணத்தை கொடுத்தார்.

புகை வண்டியில் பயணச் சீட்டில்லாமல் பயணம் செய்தது அவர் குடும்பத்துக்கு இது முதல் முறையல்ல. அவர் மனைவி செரி 2001ஆம் ஆண்டு பயணச் சீட்டில்லாமல் லண்டனில் இருந்து லூடான் நகருக்கு பயணம் செய்த போது பிடிபட்டார். இதற்காக அவரிடம் இருந்து அபராதம் வசூலிக்கப்பட்டது. (அ-5)

# தலாய்லாமாவுடன் பேசத் தவறினால் மோசமான விளைவுகள் ஏற்படும்

## சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)


திபெத் பிரச்சினை தொடர்பாக தலாய்லாமாவுடன் சீனா பேச்சுவார்த்தை நடத்ததவறினால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவில் ஒரு அங்கமாக இருக்கும் திபெத்துக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று கோரி திபெத்தியர்கள் கடந்த மார்ச்மாதம் 13 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். திபெத்தியர்களின் தலைவரான தலாய்லாமா நாங்கள் தனிநாடு கேட்கவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை மூலம் திபெத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று கேட்கிறார்.

இந்த நிலையில், திபெத்திய போராட்டத்தை சீனா கையாண்ட விதம் ஐரோப்பிய நாடு களுக்கும், அமெரிக்காவுக்கும் பிடிக்கவில்லை. அந்த நாடுகள் இதை கண்டித்து உள்ளன. தலாய்லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அந்த நாடுகள் கோரி வருகின்றன. ஆனால் அதற்கு சீனா மறுத்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்க வெளிநாட்டு துணை மந்திரி ஜான் நெக்ரோபான்ட் செனட் சபை உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் கூறியதாவது,

தலாய்லாமாவுடன் சீனா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்படி பேச்சுவார்த்தை நடத்த தவறினால், அது சீனாவுக்கு எதிரானவர்களின் கரத்தை வலுப்படுத்த உதவும். தலாய்லாமாவை விட சிறந்த ஒருவர்பேச்சு வார்த்தைக்கு சீனாவுக்கு கிடைக்க மாட்டார். அவர் மிகச் சிறந்த ஆன் மீகத் தலைவர். அமைதிக்காக பாடுபடுபவர்.



எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, தலாய்லாமாவுடன் சீனா பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். தவறினால் மோசமான விளைவுகள் ஏற்படும். திபெத்தியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் திபெத்தில் அமைதி ஏற்படாது.

இவ்வாறு அமெரிக்க துணை மந்திரி கூறினார். (அ-5)

# ஆசிரியர் பணியை கடமையாகக் கருதாமல் பாக்கியமாகக் கருதவேண்டும் - அப்துல்கலாம்

(சென்னை)


ஆசிரியர் பணியை கடமையாக நினைக்காமல் பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும் என்று இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் சுற்றுச்சூழல் பற்றிய தமிழ் அகராதி உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் வெளியீட்டு விழாவும் எதிர்கால கல்வித்திட்டம் தொடர்பான நூல் வெளியீட்டு விழாவும் நேற்று முன் தினம் நடந்தன. சுற்றுச்சூழல் தமிழ் களஞ்சிய அகராதியையும் புதிய நூலையும் துணைவேந்தர்.விஸ்வநாதன் வெளியிட்டார். அவற்றை அப்துல் கலாம் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது,

எனது ஆசிரியர் சிவசுப்பிரமணி ஐயர் ஒரு ஈடுபாட்டுடன் மனப்பூர்வமாக பாடம் நடத்துவர் அவர் பாடம் சொல்லிக்கொடுப்பதை ஒரு கடமையாக கருதாமல் அதை ஒரு லட்சியமாகவே நினைத்து பாடம் நடத்துவார்.

அந்த ஆசிரியரின் பழக்கவழக்கங்களை நினைத்துப் பார்க்கின்றேன். அவர் எங்களுக்கு ஒரு ஆசிரியராக மட்டுமல்ல ஒருவாழ்க்கை வழிகாட்டியாகவே வாழ்ந்து காட்டினார். ஒவ்வொரு வாரம் திங்கட்கிழமை நடத்தப்படும் நன்னெறி வகுப்பில் மகாத்மா காந்தி. ஆதி சங்கரர்,யேசு கிறிஸ்து, திருக்குரான், பகவத்கீதை, விஞ்ஞானி ஐன்ஸ்டீன், சேர் சி.வி.ராமன் பற்றி எல்லாம் சொல்லிக்கொடுப்பார். பறவைகள் பறக்கும் விதம் குறித்து பாடம் நடத்தும் போது பறவையின் வால், இறக்கை, அதன் உந்து சக்தி, இழுவை சக்தி என்று அனைத்தையும் சொல்லிக்கொடுப்பார்.

எல்லோருக்கும் பாடம் புரிந்ததா? என்று அவர் கேட்டபோது நான் மட்டும் புரியவிலை என்றேன். மாணவர்களுக்கு பாடம் புரியவில்லை என்று சொன்னால் ஒருபோதும் கோபப்பட மாட்டார். ராமேஸ்வரம் கடற்கரைக்கு எங்களை எல்லாம் அழைத்துச் சென்று பறவைகளை காட்டி விரிவாக விளக்கினார். இங்க



பறவை பாடம் படிக்கும் போதே நான் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டேன்.

வாழ்க்கையில் பறவை போல பறக்க வைக்கிற விமானவியல் படிப்பு சம்பந்தமாக வாழ்க்கையில் ஏதாவது செய்ய வேண்டும் என்று தணியாத ஆவல் கொண்டேன்.

இந்த படிப்பில் எப்படி சேர வேண்டும் என்று பொறுமையாக விளக்கி எனக்கு வழி காட்டினார். என் வாழ்க்கையின் வழிகாட்டியை அன்று நான் கண்டுகொண்டேன். நான் ரொக்கெட் என் ஜினியராகி ஏவுகணை தொழில் நுட்ப நிபுரணராக மாறி இன்று உங்கள் முன் உரையாடிக் கொண்டிருக்கிறேன்.

இன்று பின்னோக்கிப் பார்க்கும் போது எனது ஆசிரியர் சிவசுப்பிரமணிய ஐயர் பறவைகள் பாடம் நடத்திய அன்றுதான் என் வாழ்க்கையின் லட்சியம் உதயமான நாள் என்று எனக்கு தோன்றுகிறது.

ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் மாணவர்களின் வாழ்கையையும். செம்மைப் படுத்த வேண்டும்.

லட்சியம் உருவாக அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். மாணவர்களுக்கு புரியும் வரை பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆசிரியர் பணியை கடமையாக கருதாமல் பாக்கியமாக கருதவேண்டும். (அ-5)

# பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல் மூவர் பலி, 24பேர் காயம்

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானில் நேற்று காலை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதோடு 24பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கிலுள்ள மர்தான் எனும் இடத்திலுள்ள பொலிஸ் நிலையம் மற்றும் சந்தைப் பகுதிக்கு அருகிலேயே இந்தத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அக்பர் அலி ஷாஹ் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலில் 2 பொது மக்களும் ஒரு பொலிஸ் அதிகாரியும் உயிரிழந்துள்ளனர். 9 பொலிஸார் உட்பட 24 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 6பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அக்பர் அலி ஷாஹ் தெரி வித் துள்ளார்.



இது வரை எவரும இத்தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற தற் கொலைக் குண்டுத் தாக்குதலில் 5 படை வீரர்கள் கொல் லப்பட்டிருந்தனர். அத னையடுத்து நடைபெற் றிருக்கும் பெரியள விலான குண்டுத் தாக்குதல் இது என சுட்டிக் காட்டப் படுகின்றது. (அ-5)

# மியான்மாரின் எதிர்க்கட்சித் தலைவிக்கு அமெரிக்காவின் அதி உயர் விருது

(வோஷிங்டன்)

ஜனநாயகத்திற்காக போராடி வரும் மியான்மாரின் எதிர்க்கட்சி தலைவர் சான் சு கிவிற்கு நாட்டின் மிச உயரிய விருதை வழங்க அமெரிக்கா முன் வந்துள்ளது.

மியான்மாரை சேர்ந்த 62வயதான சான் சுகி ஜனநாயகத்தை தனது நாட்டில் மீண்டும் கொண்டு வருவதற்காக இராணுவ ஆட்சியை எதிர்த்து போராடி வருகிறார். இதன் காரணமாக அவர் கடந்த 12ஆண்டுகளாக வீட்டுக் காவ லில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு அமெரிக் காவின் உயர்ந்தபட்ச விருதான பாராளு மன்ற தங்கப் பதக்கத்தை வழங்க அமெரிக்கா முன் வந்துள்ளது.

அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் ஆகியவை இதற்கு ஏகமனதாக ஒப்புதல் வழங்கி உள்ளன. ஏற்கனவே வின்ஸ்டன் சர்ச்சில், நெல்சன் மண்டேலா. தலாய்லாமா உள்ளிட்டோருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

(அ-5)

# ஈழத்து காந்தி - தந்தை செல்வா

'' தமிழர்களுக்கு ஓர் தாயகம் உருவானால் உலகத் தமிழர்களுக்கு விடுதலை'' என்று கூறியவர் தமிழர் தலைவர் தந்தை செல்வா. தமிழ்த்தந்தை என்றும், ஈழத்துக் காந்தி என்றும் பெரியவர் என்றும் இலங்கை தமிழர்களால் போற்றப்படும் தலைவர் பிறந்த நூற்றாண்டு நிறைவை நினைவு கூருமுகமாக 1998 இல் இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்கள் விழா எடுத்தனர்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்தமிழர் வரலாறு உணர்ச்சியும் கிளர்ச்சியும் கலந்து உருவான ஒருகாவியம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை(எஸ்.ஜே.வி.) செல்வாநாயகம் என்பது அந்தக் காவிய நாயகன் பெயர். கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தில் எழுச்சிகொண்டுள்ள தமிழ்த் தேசிய வாதத்தின் தந்தை இவர். பெரியவர் செல்வா தலைமையில் 1974 மே மாதம் யாழ்ப்பாணம் -வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் முதன்முதலாக பிரகடனப்படுத்தப்பட்ட தனித் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசியலில் போராட்டமயமான ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. -

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு இரண்டு மாதங்களுக்குமுன்பாகவே செல்வா மறைந்துவிட்டார். ஆயினும் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அமோக வெற்றியீட்டி நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக விளங்கியது. 1983 ஜுலை மாதம் இலங்கையில் அரங்கேறிய தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழரின் அரசியல் வாழ்வை தீவிரவாதிகளான ஆயுதப்போராளிகள் சுவீகரித்துக்கொண்டதும் இதனால் மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் ஓரங்கட்டப்பட்டதும் தனிக்கதை. எனினும் தீவிரவாதிகளும் மிதவாதிகளும் செல்வாவை தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழருக்கு இன உணர்வை ஊட்டியவர் என நிதானவாதிகளும் தம் நெஞ்சங்களில் விடுதலை வேள்வித் தீயை மூட்டியவர் எனத் தீவிரவாதிகளும் இவரைப் போற்றுவார்கள்.

1948ஆம் ஆண்டு இலங்கை அரசு தோட்டத் தொழிலாளர்களான 10 இலட்ச இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரஜாவுரிமையையும் வாக்கு உரிமையையும் சட்டத்தின்மூலம் இரத்துச் செய்தது. இதனால் இவர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திலிருந்து 5எம்.பிக்கள் பதவியை இழந்தனர். நாடாளுமன்றத்தில் இச் சட்டத்திற்கு ஆதரவாக தாம் சார்ந்திருந்த கட்சி வாக்களித்தபோது அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான செல்வா எதிர்த்து வாக்களித்துவிட்டு அக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை நிறுவினார்.

> *தந்தை செல்வநாயகத்தின் 31ஆவது ஆண்டு நினைவு நாள் மலரஞ்சலி நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். கோட்டை தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.*
>
> *அத்துடன் பிற்பகல் 3மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு தலைவர் மேதகு ஆயர் அருட் கலாநிதி சு.செபநேசன் தலைமையில் '' விடிவை நோக்கி'' எனும் பொருளில் இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நினைவுப் பேருரை ஆற்றுவார்.*

இந்தியாவில் அமைந்துள்ளதுபோல சமஷ்டி அமைப்பு முறையில் தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி மாநிலமாக்கவேண்டும் எனக் கோரியதால் இக் கட்சியை'' பெடரல் கட்சி'' என அழைத்தனர்.

''கண் உள்ளவர்களே! பார்த்துக்கொள்ளுங்கள். இன்று இந்திய வம்சாவளித் தமிழனுக்கு இழைக்கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கு எதிராகவும் நடக்கும். சிங்களப் பேராதிக்கப் பிரளயத்தை இன்றே தடுத்து நிறுத்தவேண்டும்'' என செல்வா தீர்க்கமாக எச்சரித்தார். இந்தியாக்காரன் என நிந்திக்கப்படும் தமிழனும் இலங்கைத் தமிழனும் உறவால் ஒன்றுபட்டவனே என்ற புதிய மந்திரத்தை இலங்கைத் தமிழர்களுக்கு உணர்த்தினர். 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி. தமிழர்களின் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றது. 1974 இல் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக பரிணமித்தது.

செல்வா, சட்டத்துறையில் சாதனைகள் புரிந்து கொழும்பிலுள்ள உச்சநீதிமன்றத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞர். இதனால் பிரித்தானிய மகாராணியால் வழங்கப்படும் Queen's Counsel என்ற தகைமையைப் பெற்றவர். விருதுபெற்ற வழக்கறிஞராயினும் தமிழர் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக்காவல் என விழுப்புண் பட்டவர். இலங்கை அரசியல் களத்தில் காந்திய நெறியில் கிளர்ச்சிகள் அறிமுகப்படுத்தியவர் என்பதால் ஈழத்துக் காந்தி என்ற சிறப்புப் பெயரும் உரித்தானவர்.

இலங்கைத் தமிழர்கள், யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், வன்னியான் என்ற பிரதேசபேதங்களினால் பிளவுகள் மிகுந்த நிலையில் பிளவுகளை அகற்றி தமிழரை ஒரு கொடியின் கீழ் ஓரணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக்கியவர் பெரியவர் செல்வா.

அந்த அபூர்வ மனிதனின் தலைமையில் இன்னோர் அற்புதமும் நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர்களில் 87 சதவீதத்தினர் இந்துக்கள். பெரியவர் செல்வா ஒரு கிறிஸ்தவர். தமிழ்நாட்டை அண்மையில் விகாரப்படுத்தியுள்ள மதவெறி ஈழத் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை. அங்கு தமிழரின் சகோதரத்துவ உணர்வுகளை மதாச்சாரியங்கள் ஆக்கிரமிக்கவில்லை. அவரை இறுதி வரை தம் தலைவனாக அபிமானத்துடன் ஆராதித்தனர்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடாத்துவதும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதிமொழிகள் தந்து உடன்படிக்கைகள் செய்வதும் பின் அவற்றை மீறுவதும் இலங்கைப் பிரதமர்களுக்கு கைவந்த கலை. 1957 இல் பிரதமர் பண்டாரநாயக்கவுடனும் 1960 இல் சிறிமாவுடனும் அடுத்து 1965இல் பிரதமரான டட்லி சேனநாயக்கவுடனும் பெரியவர் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எழுதியமை உலர்வதற்கு முன்பாகவே மீறப்பட்டன. சிங்களத் தலைவர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டாலும் தமிழரின் குறைந்தபட்ச கோரிக்கைகளைக் கூட சிங்களத் தலைவர்கள் நிராகரித்ததாலும் நிதானவாதியான செல்வா பிரிவினைக்கு துணிந்தார். தமிழ் ஈழக் கோரிக்கையினை முன்மொழிந்தார்.



பெரியவர் செல்வா சிறிய விபத்தினால் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு 1977 ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி மறைந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அவரைப் பரிசோதிப்பதற்கென நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியை சென்னையிலிருந்து விசேஷமாக அனுப்பி வைத்தவர் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி. இலங்கை அரசியலில் நேர்மையும் கண்ணியமும் மிக்க ஒரு தலைவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர் செல்வா. அவர் மறைந்தபோது நாடாளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஜே. ஆர். ஜெயவர்த்தன உட்பட அனைத்து சிங்களத் தலைவர்களும் பெரியவரின் தூய்மையான அரசியல் வாழ்வைப் பாராட்டிப் பேசினார்கள்.

தமிழர் உரிமைகளைக் காக்க பெரியவர் செல்வா சத்திய யுத்தத்தைத் தொடங்கினார். திவ்வியமாக ஆரம்பித்த போர் திசை மாறியதற்கு சிங்கள மக்களே பொறுப்பாளிகள். காந்திய நெறியில் தொடங்கி இன்று ஏ.கே. 47 துப்பாக்கிகள், ஏவுகணைகள், கனரக பீரங்கிகள் எனப் பரிணமித்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் யுத்த களத்திலே செத்து மடிந்திருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர் உற்றார், உறவினரையும் வீடுவாசல்களையும் இழந்து அகதிகளாயுள்ளனர். யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தை காலத்தின் கொடுமை என்பதா? இங்கு அவல வாழ்வை நடாத்தும் தமிழர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் '' தமிழரை இனி கடவுள் தான் காக்கவேண்டும்'' என்றார் செல்வா. விரக்தியில் கூறினாரா அல்லது விஷயம் அறிந்துதான் கூறினாரா? ☑

**-கரிகாலன்-**

# சித்த மருத்துவம் ஓர் அறிமுகம்

தமிழ் மக்களின் பாரம்பரிய கலை மரபுகளில் ஒன்று சித்த மருத்துவமாகும். அதனால் சித்த மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என அழைப்பது சாலச்சிறந்தது. தமிழ் மருத்துவம் என்று கூறும்போது அது எதனைக் குறிக்கின்றது என்பதனைச் சிந்திப்பது அவசியமாகும். சாதாரணமாக ஒருவர் பேச்சு வழக்கில் ஆங்கில மருந்து சாப்பிட்டேன். தமிழ் மருந்து சாப்பிட்டேன் என்று கூறுவது வழக்கம். தற்போது ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என்ற இரு பதங்களும் எமது கல்வியாளர் மத்தியில் கூட சிறு சலனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுர்வேதமும் சித்த மருத்துவமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருந்தாலும் ஆரிய மக்களிடமிருந்து ஆயுர்வேத மருத்துவ முறையும் திராவிட மக்களிடமிருந்து சித்த மருத்துவ முறையும் தோன்றியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேத காலத்துக்கு முற்பட்ட மருத்துவத்தை திராவிட மருத்துவம் என்றும், அவை புராதன சித்தர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு சித்த மருத்துவம் என்ற பெயரில் சிறப்புப் பொலிவு பெற்று விளங்கியது என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த இரு மருத்துவ முறைகளையும் இரு கண்கள் போலக் கருதி மனித சமுதாயத்துக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்வதே சிறந்த பண்பாகும்.

இந்து தத்துவத்தில் வேதாந்தம், சைவ சித்தாந்தம் ஆகிய இரு பிரிவுகள் காணப்படுகின்றன. வேதாந்தம் வட இந்தியாவுக்குரிய தத்துவமென்றும் சைவசித்தாந்தம் தென்நாட்டிற்குரிய தத்துவமென்றும் சிறப்பிக்கப்படுகின்றது. அவ்வாறே ஆயுர்வேதம் இந்தியாவில் வடநாட்டில் தோற்றம் பெற்றதென்றும், சித்த மருத்துவம் தென்னாட்டில் தோற்றம் பெற்றது என்றும் கருதப்படும். இவ் இரு மருத்துவ முறைகளும் '' இந்திய மருத்துவம்'' என்ற பெயரில் இந்திய அரசால் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டது போல் இலங்கையிலும் தென்பகுதி சிங்கள மக்களால் ஆயுர்வேத மருத்துவமுறையும், வடக்கு கிழக்குப் பகுதி தமிழ் மக்களால் சித்த மருத்துவமுறையும் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றன.

ஆனால் பெரும்பான்மை மக்களின் ஆட்சி முறையில் அரசநிர்வாகக் கட்டமைப்புக்களில், ஆயுர்வேத மருத்துவமுறை அரியாசனத்தில் ஏறி சித்தமருத்துவம் பின்தள்ளப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வடக்கு கிழக்கில் சித்த மருத்துவத்தை சிறப்புற வளர்ப்பதற்கு முக்கியமாக ஒரு சித்த மருந்து தயாரிப்பு நிலையம் உருவாக்கப்படுவது இன்றியமையாத தேவையாகும். இதனை எமது அரசியல் பிரமுகர்களும், பொது அமைப்புக்களும் கவனத்தில் கொள்வது அத்தியாவசியமாகும்.

சித்த மருத்துவம் தென்நாட்டில் (தமிழ் நாடு) சித்தர்களால் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்பட்டு எமக்குத் தந்த அரும்பெரும் செல்வமாகும். சித்தர் என்ற சொல் சித்து என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதற்கு வெற்றி, அறிவு, பூரணத்துவம் என பல பொருள் உண்டு. சித்திபெற்றவர்கள் சித்தர்கள். சித்தியுடையவர்கள் சித்தர்கள் என்றும் கூறலாம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் ஒன்றிணைக்க வல்ல திறமையுடையவர்கள் சித்தர்கள். சித்தர்களில் பல பிரிவுகள் உண்டு.

1. முதற் சித்தர் (மூலமரபு)
2. இடைச்சித்தர் (பாலமரபு)
3. கடைச்சித்தர் (கைல மரபு)

இவற்றைவிட

நவநாதசித்தர், பதினெண் சித்தர், நவகோடி சித்தர், நவசித்தர்.

எனும் பிரிவுகளும் உண்டு.

**முதற்சித்தர்:**

பூரண ஒளி எந்த வடிவமோ, எந்தப் பெயரோ இல்லாதது. எங்கும் நிறைந்தது. ஐம் பூதங்களிலும் நிறைந்துள்ளது. இவ் ஐம் பூதங்களிலிருந்து ஏழு வகைத் தோற்றமும் உண்டானது. இவ்வாறு தோற்றத்திற்குக் காரணமான பூரண ஒளியிலிருந்து தோன்றியவர்களே முதல் சித்தர்கள். இதற்கு உதாரணமாக முருகனின் தோற்றத்தைக் கூறலாம். முருகன் மூல மரபில் வந்த சித்தர் என்பது சங்கத்தமிழ் இலக்கிய மரபாகும். சிவனையும் முதல் சித்தர் என அழைப்பர். தமிழ் நாட்டில் சிவனது ஒரு திருத்தலம்''சித்தீஸ்வரம்'' எனப் படும். தமிழகத்திலுள்ள அநேகமான கோயில்களின் அருகில் ஒவ்வொரு சித்தரின் சமாதியும் அமைந்துள்ளது. உதாரணமாக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ளது சொக்கநாதச் சித்தரின் சமாதியாகும்.

**இடைச்சித்தர்:**

யோனி வாயிலாகப் பிறக்காமல் பிற உடம்பில் புகுந்து தோன்றி உலக நன்மைக்காக பல அரிய பெரிய செயல்களைச் செய்தவர்கள். இதற்கு உதாரணமாக திருமூலரின் சரிதம் அமைந்துள்ளது.

**கடைச்சித்தர்:**

கருவில் தோன்றி யோனிவாயிலாக பிறந்து பின் தவபலத்தால் சகல கலைகளையும் சித்துக்களையும் கற்று சித்து கைவரப் பெற்ற சித்தர்கள்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சித்தமருத்துவத்தோடு பதினெண் சித்தர்கள் மிகவும் தொடர்புபட்டவர்களாவர். ஆனால் அவர்கள் பற்றிய தெளிவான வரலாறு மறைபொருளாகவே உள்ளது. மேலும் அவர்கள் காலம் பற்றிய கருத்து வேறுபாடும் உள்ளன. ஆனால் பொதுவாக பதினெட்டுச் சித்தர்கள் என்ற ஒரு மரபு காணப்படுகின்றது.

"வாத நூல் அத்தம் பதினெண்பேர் சித்தர்
வருணித்த நூல்களும் பலிதம்"

என புலஸ்தியர் கற்பம் 300 என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் தென்பகுதியில் பதினெண் சித்தர்கள் எனக் குறிப்பிடும் மரபு போலவே வட இந்தியாவில் நவநாத சித்தர்கள் எனக் குறிப்பிடும் மரபும் உண்டு. இந்தப் பதினெண் சித்தர்கள் யாவர் என்பதை அண்மையில் தொகுக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் காணலாம்.

நாம் ஞானஒளியைப் பெறவேண்டுமாயின் உடம்பும், மனமும் நல்ல நிலையில் இருக்கவேண்டும். உடலைப் பேணி பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைச் சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர். திருமூலரின் வாக்குப்படி

*உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்.*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.*

இதிலிருந்து நாம் மெய்யறிவு பெற உடற் சுகம் அவசியம் என்பதை உணரலாம். மேலும் உடலினைச் சித்தர்கள் கோயிலாகவே கருதினர். இதனை

*உடம்பினை முன்னம் இழுக்கென்று*
*இருந்தேன்*
*உடம்பின் உள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்பினுள் உத்தமன் கோவில்*
*கொண்டேனென்று*
*உடம்பினை யான் இருந்து*
*ஓம்புகின்றேனே.*

இவ்வாறு உடல்நலத்தின் முக்கியத்துவம் பற்றி சித்தர்கள் கூறியதுடன் சமுதாய முன்னேற்றத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் கீழ்க் குறிப்பிட்டவாறு பல நூல்களை எமக்குத் தந்து வழிகாட்டினார்கள்.

1. நோய்கள் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும்முறைகளை தெரிவித்து நூல்கள் எழுதியுள்ளனர்.
2. கோள்களின் நிலை, கால மாறுபாடு பற்றி விளக்க நூல்களையும் எழுதியுள்ளனர்.
3. நிறைமொழி மாந்தராக விளங்கிய சித்தர்கள் மறைமொழிகளை மந்திரங்களாக்கி மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும், கூர்மைப்படுத்தவும் தெய்வவழிபாட்டு முறைகளை பாடலாக்கியுள்ளனர்.
4. யோகப் பயிற்சி, ஆன்மீகப் பயிற்சி காயகற்ப முறைகள் பற்றியும் நூல்கள் தந்துள்ளனர்.

**Dr. பொன். இராமநாதன் M.D(S), Ph.D.**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து சித்த மருத்துவம், தமிழ் மருத்துவம் என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகின்றது. இதனை பேணிப் பாதுகாக்க வேண்டியது தமிழர்களது தலையாய கடமையாகும். இதற்கமைய சித்த மருத்துவம் தழைத்தோங்க அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடுவோமாக. ☑

# ஈழதேசத்தை கூறுபோடும் இலங்கை அரசின் சதியை முறியடித்திட தலையீடு தவிர்க்க முடியாத தேவை

## இந்திய அரசை வலியுறுத்துமாறு கலைஞரிடம் திருமாவளவன் கோரிக்கை

(கொழும்பு)

ஈழ தேசத்தின் வடகிழக்கு மாகாணத்தை பிரித்து கிழக்குப் பிரதேசத்தில் தேர்தல் நடத்துவதனை தடுக்க இந்திய அரசின் தலையீடு அவசியம் என்பதனை இந்திய அரசுக்கு தமிழக முதல்வர் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற தமிழ் நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவள வன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை தொல் திருமாவளவன் விடுத்துள்ள அறிக்கையில், தமிழக சட்டப் பேரவையில் 23ஆம் திகதி அன்று ஈழத் தமிழர் சிக்கல் தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அமைதிப் பேச்சு வார்த்தைக்கு மத்திய அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழத்தில் அரசியல் நெருக்கடிகள் நிறைந்த இந்தச் சூழலில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது உலகத் தமிழர்களுக்கு ஆறுதல் அளித்துள்ளது.

இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழக முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தை சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மறைந்த ராஜீவ் முயற்சியில் உருவான இந்திய இலங்கை ஒப்பந்தப்படி ஈழ தேசத்தின் வடகிழக்கு மாகாணத்தை ஒருபோதும் பிரிக்கக் கூவாது என உறுதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்துக்கு எதிரான வகையில் வடகிழக்கு மாகாணத்தை அரசியல் ரீதியாக இரண்டாகப் பிரித்து தனித்தனியே தேர்தல்களை நடத்த ஏற்பாடுகளை செய்து வருகிறது. பிரிக்கப்பட்டு உருவாக்கபட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் தபால் வாக்குப் பதிவு தொடங்க உள்ளது. இவ்வாறான சூழலில் தான், இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக- இந்திய அரசுக்கு எதிராக- ராஜீவுக்கு எதிராக வட கிழக்கு மாகாணத்தை பிரிக்கும் சதியை முறிய டித்திட இந்திய அரசு உடனே தலையிட வேண் டும் என்று வலியுறுத்துகிற வகையிலும் அங்கே நடைபெற உள்ள தேர்தலை தடுப்பதற்கோ அல்லது தள்ளி வைப்பதற்கோ ஏற்ற வகையில் இந்திய அரசின் தலையீடு தேர்தல் நடை முறை தொடங்குவதற்கு முன்னதாகவே இருந்திட வேண்டும் என்று வலியுறுத்துகிற வகை யிலும் தமிழக சட்டப்பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்என்று விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க .ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் முன்மொழியப்பட்டது. ஆனால் அதனை சட்டப்பேரவையில் ஒத்திவைப்பு தீர்மானமாக அனுமதிக்கவில்லை என்றாலும் சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானமாக விவாதிப்பதற்கு தமிழக முதல்வர் அனுமதி அளித்ததோடு இந்திய அரசின் தலையீட்டை வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றியதற்கு மனமார்ந்த நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான இலங்கை அரசின் சதி முயற்சி தொடர்பாகவும் வடகிழக்கு மாகாணத்தை அரசியல் ரீதியாக பிரிப்பதை இந்திய அரசு தடுக்க வேண்டும் என்பதும் தொடர்பாகவும் தீர்மானத்தில் ஏதும் இல்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது. எனவே முதல்வர் கலைஞர் ஈழதேசத்தை கூறுபோடும் அரசியல் சதியை முறியடித்திட இந்திய அரசின் தலையீடு தவிர்க்கமுடியாத தேவையாகவுள்ளது என்பதை இந்திய அரசிற்கு சுட்டிக்காட்டவேண்டும் என விடுதலைச் சிறுத்தை சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார். (அ-5)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

2008 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு தகைமையுடையவர் களிடமிருந்து விண்ணப்பங்களை கலாசார திணைக்களம் கோரியுள்ளது.

60வயதுக்கு மேற்பட்ட பாரம்பரிய கலைஞர்கள், எழுத்தாளர்கள் மேளதாளக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், நடன நாட்டியக் கலைஞர்கள், வரைபடக் கலைஞர் போன்ற கலைத்துறையைச் சார்ந்தோர் இவ்விருதுக்காக விண்ணபிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் யாவும் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# மாண்புமிக்கோர் குழுவின் நடவடிக்கை ; ஜெனிவாவில் முறையிட அரசு முடிவு

*அமைச்சர் மஹிந்த சமரசிங்க தகவல்*

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், காணாமல் போதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளைக் கண்காணித்து அறிக்கையிடுவதற்காக அழைக்கப் பட்டிருந்த சர்வதேச மாண்புமிக்கோர் குழுவின் நடவடிக்கை குறித்து மே 13 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் அரசாங்கம் முறைப்பாடு செய்யும் என்று அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். ஓய்வு பெற்ற இந்திய முன்னாள் நீதியரசர் பகவதி தலைமையிலான சர்வதேச மாண்பு மிக்கோர் குழுவின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அக் குழுவிடம் தனது விசனத்தை தெரிவித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடை பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதனை ஆராய்வதற்காகவே சர்வதேச சுயாதீன மாண்பு மிக்கோர்குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அக்குழுவின் நடவடிக்கை வழங்கப் பட்டுள்ள அதிகாரத்தை மீறியதாகவே இருக்கின்றது என்பதை ஜனாதிபதி அக்குழுவிடம் சுட்டிக்காட்டினார். ஓய்வுபெற்ற இந்திய முன்னாள் நீதியரசர் பகவதி தலைமை யிலான குழுவினருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவிற்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி தனது விசனத்தை தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் மற்றும் மனித உரிமைகள் குறித்து பேசுவதற்காக சர்வதேச மாண்பு மிக்கோர் குழு நாட்டிற்கு அழைக்கப்பட வில்லை என்பதையும் குழுவின் அறிக்கை தொடர்பாகவும் ஜெனிவாவில் மே13ஆம் திகதி நடைபெறவுள்ள மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் முறைப்பாடுசெய்வேன் எனத் தெரிவித்தார். (அ-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு

# வெளிவாரிப் பரீட்சைகள்-2007

1. வணிக முதற் தேர்வு -2006
2. வணிகமாணி பகுதி -I -2005 & 2006
3. வணிகமாணி பகுதி -II-2004 & 2005
4. வணிகமாணி பகுதி -III -2004

மேற்படி பரீட்சைகளை 21.05.2008 (புதன்கிழமை) தொடக்கம் 25.06.2008 (புதன் கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| வணிக முதற் தேர்வு -2006 | 21.05.2008 | 30.05.2008 |
| வணிகமாணி பகுதி -II -2004&2005 | 02.06.2008 | 07.06.2008 |
| வணிகமாணி பகுதி -I-2005 &2006 | 09.06.2008 | 16.06.2008 |
| வணிகமாணி பகுதி -III -2004 | 17.06.2008 | 25.06.2008 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 14.05.2008 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
24.04.2008.

(1059)



## தூய போல் கலைக்கழகம் தயாரித்து வழங்கும்

# அமைதியின் தெய்வம் (பாகம் -I)

## இறுவட்டு வெளியீட்டு விழா

காலம் : 26.04.2008 சனிக்கிழமை
மாலை 3.30 மணி

இடம்: புனித யாக்கோபு ஆலய மண்டபம், நல்லூர்

### நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவேண்டலும், வரவேற்புரையும்
  **அருள்பணி. அ.ஸ்ரீபன்** (புனித யாக்கோபு ஆலயம், நல்லூர்)
- தலைமையுரை
  **திரு.எஸ்.புத்திசிகாமணி**
- வெளியீட்டுரையும் ,இறுவட்டு வெளியீடும்
  **அருள்பணி எஸ்.பி.நேசகுமார்** (யாழ்.குருமுதல்வர் ,இலங்கைத் திருச்சபை)
- பிரதிகள் வழங்கல்
- மதிப்பீட்டுரை
  **இசைத்தென்றல் திரு.ம.யேசுதாசன்** (இசைத்துறைப்பொறுப்பாளர் , திருமறைக்கலாமன்றம்)
- சிறப்புரைகள்
  **அருள்பணி எஸ்.எயின்சிலி றொஷான்**
  (யாழ். ஆயரின் செயலாளர், பிரதம ஆசிரியர் -பாதுகாவலன்)
  **திரு.எம்.ஞானப்பிரகாசம்**
  (அதிபர், யா/சென் சாள்ஸ் மகாவித்தியாலயம்)
- கலைஞர்கள் கௌரவிப்பும்,பிரதம விருந்தினர் உரையும்
  **பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
  (முன்னாள் துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- ஏற்புரை
  **அருள்சகோதரன் வி.பி.தனேந்திரா**
- நன்றியுரை
  **திருமதி ஹேமா தூயகுமாரன்**

நடைபெறும் இந்நிகழ்வில் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(1114) **தூயகுமாரன் குடும்பத்தினர்.**



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
83,Palaly Road
Kantharmadam, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna @ yahoo.com

## சான்றிதழ் வழங்கும் வைபவமும் நூல் வெளியீடும்

Alliance Francaise de Jaffna இன் மூலம் நடாத்தப்பட்ட பிரெஞ்சு மொழிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அதனைத் தொடர்ந்து பிரெஞ்சு மொழிக் கவி ஞர்களின் கவிதை மொழிபெயர்ப்பு (பிரெஞ்சிலிருந்து தமிழில்) நூலான:

**விசிறி- 20ஆம் நூற்றாண்டின் மூன்று பிரெஞ்சு கவிஞர்கள்**

என்ற நூல் வெளியீடும் 26.04.2008 இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு Alliance Francaise de Jaffna இல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்:-கலாநிதி (திருமதி) என். கிருஷ்ணவேணி
(நுண்கலைத்துறைத் தலைவர்)

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

(1115)

அளவுக்கு மீறிய செல்வமோ, அளவு மீறிய வறுமையோ மாணவர்களின் கல்வியையும் ஒழுக்கத்தையும் திறமையையும் மழுங்கச் செய்து விடுகிறது.

-பிளேட்டோ

# வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் சபிக்கப்பட்ட சிறிய பாடசாலைகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 2007ற்கான க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அந்த ஆய்வுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளின் பெறுபேறுகள் திருப்தியற்றவையாக இருப்பதைக் காணமுடிகிறது.

குறிப்பாக யாழ்.நகர மையத்தை அண்மித்த ஒரு பாடசாலையில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவருமே சித்தி எய்தவில்லை என்ற செய்தி வேதனைக்குரியதாகும்.

இத்தகைய பரிதாப நிலைக்கான காரணம் என்ன என்பதும், எதிர்கால்த்திலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விடயத்திலும் மேற்கொள்ளக் கூடிய திட்டங்கள் -பரிகார நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வது பொருத்துடையதாகும்.

அவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரபல்யமான பாடசாலைகள், பிரபல்யம் குறைந்த பாடசாலைகள், பின்தங்கிய பாடசாலைகள், தவறிழைத்த ஆசிரியர்களுக்கு அடைக்கலம் வழங்கும் பாடசாலைகள் எனப் பல பிரிவுகள் காணப்படுகின்றன.

இத்தகைய பல்வகைமைப்பாடுகள் இருப்பதால் ஏழைக் குடும்பங்கள் சார்ந்த பிள்ளைகள் கல்வியால் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

பிரபல்யமான பாடசாலைகளுக்கு உலகளாவிய ரீதியில் இருக்கக் கூடிய பழைய மாணவர் சங்கங்கள், கல்வி அதிகாரிகளின் செல்வாக்கினால் கிடைக்கக் கூடிய பௌதிக மற்றும் தகவல் தொழில் நுட்ப சாதனைகளின் கிடைப்பனவு, மாணவர்களின் அனுமதி மூலமான அன்பளிப்புகள் என்ற வகையில் அந்தப் பாடசாலைகள் தங்கள் பௌதிக வளங்கள் உள்ளிட்ட தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றன.

இதனால் அந்தப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடு உயர்வாகக் காணப்படுகின்றது.

இதற்கு மேலாக பெற்றோர்களின் ஊக்குவிப்பும் ஒத்தாசையும் கிடைப்பதினால் அந்தப் பாடசாலைகளின் அடைவு மட்டம் திருப்திகரமாக உள்ளது.

ஆனால் பிரபல்யமான அல்லது ஓரளவு பெயர் குறிப்பிட்டுக் கூறக்கூடியதான பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இயங்குவதை பார்க்க முடிகிறது.

இந்தப் பாடசாலைகளின் வளர்ச்சியில் கல்வித்திணைக்களம் மற்றும் அந்தப் பாடசாலை அமைந்துள்ள சமூகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பும் உதவியும் கிடைப்பதில்லை.

இதனால் அந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் உயர் வகுப்புக்குச் செல்லக் கூடியதான பெறுபேறுகளைக் கூட பெறமுடியாமல் போகின்றது.

எனவே இது விடயத்தில் ஓர் விழிப்புணர்வு ஏற்படுவது கட்டாயமானதாகும்.

# பொதுமக்கள் படை முகாம்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்

## அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு


(கொழும்பு)

சாதாரண பொதுமக்கள் படை முகாம்களுக்குச் செல்ல முடியாது, அதே போல, முன்னாள் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கும் கேணல் ஜெயவீர பெர்னாண்டோவிற்கும் முகாம்களுக்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கத்தின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் மேலும் கூறுயதாவது,

படை முகாம்களுக்கு சாதாரண பொது மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனக்கு தெரிந்த வகையில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் கேணல் ஜெயவீர பெர்னாண்டோவும் சாதாரண பொதுமக்களாவர்.

சாதாரண பொதுமக்களான அவ்விருவருக்கும் படை முகாம்களுக்குச் செல்வதற்கு உரிமை இருக்குமாயின் நீதிமன்றத்தினூடாக அந்த உரிமையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.



முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் கேணல் ஜெயவீர பெர்னாண்டோவும் படைமுகாம்களுக்குச் செல்வதற்கு இராணுவத் தலைமையகம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# தமிழ் நாட்டின் தலையீடு பற்றி அரசு கவலைப்படவில்லை

## பாதுகாப்பு பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசு, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் முரண்பாடுகளில் தலையிடுவதாக எடுக்கப்பட்ட முடிவு பற்றி இலங்கை அரசு கவலை கொள்ளப் போவதில்லையென நேற்றுமுன் தினம் அறிவித்துள்ளது. தமிழ் நாடு அரசு இந்திய மத்திய அரசை இலங்கை விவ காரத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருப்பதையிட்டு இலங்கை அரசின் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக் வெல மேற்கூறியவாறு தெரிவித் தார்.

ரம்புக்வெல செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில், இலங்கை அரசுக்கு தீவின் இனமுரண்பாடுகள் பற்றிய அண்டைநாடுகளின் அரசியல் நெருக்கீடுகள் உள்ளன என்றாலும் இந்திய அரசு பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதில் தமக்கு ஒத்துழைப்பதாக கூறினார்.

தமிழ் நாடு அரசின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி தலைமையிலான கூட்டத்தில் புதன் கிழமை இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானத்தில் இந்தியா, இலங்கையில் இரு பகுதிக் கிடையே ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை ஒழுங்கு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. தமிழ் நாட்டில் வாழும் 50மில்லியனுக்கும் அதிகமான தமிழ்மக்கள் இலங்கையின் வட பகுதி தமிழ் மக்களுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளனர்.

இலங்கையின் சிறுபான்மைத் தமிழர் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் 1983இல் இருந்து வடக்கு கிழக்கு இணைந்த தனி தமிழ் நாடு நடாத்தும் போராட்டத்தினால் 70ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியா 1987இல் இதில் நேரடியாகத் தலையிட்டதன் பின்னர் 1990இல் இருந்து ஒரு கைவிடப்பட்ட கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. (அ)

# ஜனநாயகத்தை மீறும் அரசிற்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அநுரகுமார திஸ்ஸாநாயக்க

(கொழும்பு)

ஜனநாயகத்தை மீறிச்செயற்படும் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுபினர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் ஏனைய கட்சிகளுக்கு எதிராக மோசமான வன்முறைகளில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத்திடமிருந்து அவற்றைப்பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் எனஅவர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்படுவதை அனைத்துத் தரப்பினரும் உறுதிப் படுத்த வேண்டும். எதிர்க்கட்சிகளை தாக்கும் வகையில் அரசாங்கம் சுவரொட்டிப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றது.

பல அரசாங்க அமைச்சர்கள் அரசாங்க சொத்துக்களை தேர்தல் பிரசாரங்களுக்கு தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# ஆசிரியர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

தேசிய சம்பள மற்றும் சேவை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தல்கள் நடைமுறைப் படுத்தப் படவில்லை என மூன்று ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஜனாதிபதியிடம் 1994ஆம் ஆண்டு ஆசிரியர்கள் சேவை உருவாக்கப்பட்டதன் முன்பும் பின்பும் ஆசிரியர் சம்பளத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை கவனத்தில் கொண்டு ஒரு இறுதி முடிவை எடுக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தியிருந்தும் அந்த அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

பத்து நாட்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிப்பதாக உறுதி அளித்த ஆணைக்குழு அவ்வாறு செய்யத்தவறியமையால் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி திறைசேரி செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவுடனான சந்திப்பு எதுவித தீர்மானமும் எடுக்காத நிலையில் முடிவுற்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை எதிர்க்கின்ற சில தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து ஆணைக்குழு தாமதப்படுத்தும் தந்திரத்தை கையாள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-5)

# தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு (NDES) விண்ணப்பம்கோரல்

(கொழும்பு)

கட்டுநாயக்காவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சி.ஈ (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர் களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் 20.06.2008 ஆம் திகதிக்க முன்னர்அனுப்பப்படல் வேண் டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் இல.7, கோவில் வீதி யில் உள்ள பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத் திலும் பெற்றுக்கொள்ளலாம் என சபையின் மாகாணப் பணிப்பாளர் பொ.இராமநாதன்தெரிவித்துள்ளார். ஓ

## ஓலைச் சுவடிகள் 11

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**கோயில் தரிசனத்தின் போது ஆண்கள் மேலுடைகள் அணியலாமா?**

சில கோயில்களில் தரிசனம் செய்யும் போது மேற்சட்டை அணியத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசாரத்தை பலரும் ஏளனம் செய்கின்றனர்.

ஆனால் இந்துமத பிரமாணத்தின் படி ஆண்கள் மேலாடைகள் அணியாமல் ஆராதிக்க வேண்டும் என்ற விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

கோயில் தரிசனம் செய்யும் போது நாம் மனதில் கொள்வது இறை வனருள் நம்மில் வந்து நிறைய வேண்டும் என்பதே. கோயில் வாசலுக்கு முன், தெய்வ விக்கிரகத்துக்கு சமாந்தரமாக வணங்கி நிற்கும் பக்தரில் இறையருள் வந்து நிறையும் என்பது நம்பிக்கை. விக்கிரகத்தின் மூலாதாரம் முதல் எல்லா பாகங்களிலிருந்தும் இறைவல்லமை புறப்பட்டு பக்தனின் ஒவ்வொரு பாகத் தையும் நோக்கி வந்து சேர்ந்து ஒவ்வொரு பாகமும் உணர்வடைகின்றன.

பிரம்ம முகூர்த்தத்தில் ஈரத்துணி உடுத்து கோயில் தரிசனம் செய்வத மிக உணர்வளிக்கின்ற ஒன்றாக நாம் அறிந்துள்ளோம். ஈரம் உடலில் உள்ள போது தெய்வீக உணர்வு பக்தரின் உடலில் குடியேறும்.

பொதுவாக அதிகாலையிலும் மாலையிலும் கோயில் தரிசனம் செய்யும் போது ஆண்கள் மேலாடை இன்றி கோயில் தரிசிக்க வேண்டும் என்பது விதி. உதய சூரியனிலும், மறையும் சூரியனிலும் இருந்து புறப்பட்டுவரும் ஒளிக் கதிர்கள், ஆடையணியாத உடல் பாகங்களில் பதிந்து விற்றமின் டி கிடைக்கப் பெறுதல் உடல் நலத்துக்கு மிகச்சிறப்பானது என்று விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது.

# யாழ்.மாவட்ட நிலைமைகள் குறித்து மாவை. எம்.பி. – சந்திரசிறி பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எனது கட்டுப்பாட்டின் கீழ் கடந்த இரண்டரை ஆண்டுகளில் கடத்தல், கொலை, கொள்ளை என்பன குறைவடைந்துள்ளது என யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவை சந்தித்தபோதே யாழ். கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யாழ்.வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவை நேற்று அழைத்து யாழ். மாவட்ட நிலைமைகள் தொடர்பாக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆராய்ந்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் கடத்தல்கள், காணாமல் போதல்கள், கொலை, கொள்ளைச் சம்பவங்களின்அதிகரிப்பு, இலக்கத் தகடில்லாத மோட்டார் சைக்கிள்களின் நடமாட்டம், மீன்பிடித் தடை , விவசாயப் பொருள்களை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் வீதிச் சோதனைச் சாவடிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மாவை. சேனாதிராஜா எம்.பி. கடிதம் எழுதியிருந்தார்.

இவ்விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார். இந் நிலையிலேயே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் யாழ்.இராணுவத் தளபதியினால் பின்வரும் விடயங்கள் கூறப்பட்டதாக மாவை. எம்.பி. தெரிவித்தார். அவை வருமாறு;

யாழ்.பிரதான வீதியில் தந்தை செல்வாவின் சதுக்கத்திற்கு முன்பாகவுள்ள வீதிச் சோதனைச் சாவடியை அகற்றத் தீர்மானித்துள்ளோம். மற்றும் எனது கட்டுப்பாட்டின் கீழ் கடந்த இரண்டரை ஆண்டுகளில் கடத்தல்கள், காணாமல் போதல் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன.

விவசாயப் பொருள்களை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கு போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளே காரணம். ஏனெனில் விடுதலைப் புலிகளே கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி வட போர்முனையில் யுத்தத்தை ஆரம்பித்து ஏ-9 பாதையை மூடக் காரணமாகவிருந்தனர். இவ்வாறு யாழ்.கட்டளைத் தளபதி குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த மாவை.சேனாதிராஜா எம்.பி.; விடுதலைப்புலிகள் சிங்களத் தலைவர்களின் ஏமாற்று வேலைகளினால் தான் யுத்தத்தை ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகளே 2002 ஆம் ஆண்டு சிங்களத் தலைமைகளுடன் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்தனர்.

பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பல்வேறுபட்ட திட்டங்களை முன்வைத்தனர். எனினும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு–அரசியல் வழிமூலமான தீர்வுக்கு அக்கறை கொண்டிராத சிங்களத் தலைமைகளே அவற்றைப் பொருட்படுத்தாமல் யுத்தத்திலேயே நாட்டம் கொண்டிருந்தன.

இதனாலேயே மீண்டும் ஒருயுத்தம் நடைபெறுகின்றது. இவ் யுத்தத்தில் தமிழ் – சிங்கள இளைஞர்களே உயிரிழக்கின்றனர். இதனை அனைவரும் எதிர்க்கின்றனர் என மாவை.எம்.பி. எடுத்துரைத்தார். (எ-5)




மடுத் தேவாலயப் பகுதியில் காணப்படும் இராணுவத்தினர்.

## புலிகளை பாதுகாக்கும் சதித் திட்டத்தில் இந்தியா தலைமையில் மேற்குலக நாடுகள்

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்திவரும் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் சதித்திட்டத்தினை இந்தியா தலைமையிலான மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த சதிக்கு அரசாங்கம் சோரம் போயுள்ளது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் குற்றஞ்சாட்டினார். ஒற்றையாட்சியும், சமஷ்டியும் கலந்த புதிய தீர்வினை முன்வைக்கப் போவதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.இத்தகைய தீர்வு முன்வைக்கப்படுமானால் வீதியில் இறங்கிப் போராடி அதனை நாம் தடுத்து நிறுத்துவோம் என்றும் அவர் சுட்டிக் கட்டினார்.

நாவல சோலீஸ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே விஜித்த ஹேரத் எம்.பி இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டபோதும், மறைமுகமாக ஆதரவு வழங்கப்படுகிறது.

அமெரிக்காவும் இதுபோன்ற இரட்டை வேடத்தை போடுகிறது. நோர்வே உட்பட மேற்குலகு நாடுகளும் இதே நாடகத்தை அரங்கேற்றுகின்றன.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலைத்திருப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பியதில்லை. எனவே ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்துவதற்காக எமது படையினரின் தாக்குதலில் பலவீனம் அடைந்து வரும் விடுதலைப் புலிகளை பாதுகாக்க யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.தீர்வு முன்வைக்கப் படவேண்டுமென்ற அழுத்தத்தை எம்மீது திணிக்கின்றது என்றார். (ச)

## மன்னார் ஆயருக்கு அறிவிப்பு

மடு தேவாலயப் பகுதிக்கு இராணுவத்தினர் வந்துள்ளமை தொடர்பாக தனக்கு உத்தியோக பூர்வமற்ற வகையில் இராணுவத்தினர் தெரிவித்ததாக மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் தெரிவித்துள்ளார். புலிகள் நேற்று முன்தினமே அப்பகுதியிலிருந்து வெளியேறி விட்டதாக இராணுவத்தினர் தெரிவித்ததாகவும் மடுப்பிரதேசத்தின் தற்போதைய நிலை தொடர்பாக விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் ஆயர் தெரிவித்துள்ளார். (ச-2)

## ஆட்டுப்...

பொதி தொடர்பாக மக்கள் பொலிஸாருக்கு அறிவித்ததும் விசேட அதிர டிப்படையினரின் குண்டு செயலிழக்கச் செய் யும் பிரிவினர் குண்டைச் செயலிழக்கச் செய் துள்ளனர்.

5 கிலோக்கிராம் எடையுள்ள கிளைமோர்க் குண்டொன்றையே செயலிழக்கச் செய்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். இதனால் அப் பகுதியில் நீண்ட வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. (ச-2,5)

## இரணை...

இரணைமடுவில் விடுதலைப் புலிகளின் விமான ஓடு பாதைக்கு தென் கிழக்கில் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த முகாம் முற்றாக தாக்கியழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-2,5)

## திடீர் விமானத்...

பதில்லை என்பதால் பதற்றமடைந்த பணியாளர்கள் அப் பகுதி மக்களுக்கு அறிவித்ததால் அங்கு பதற்றமும் குழப்பமும் ஏற்பட்டது.

பின்னர் வான் படைக்குச் சொந்தமான விமானம் அது என்று தெரிவிக்கப்பட்டதும் அப் பகுதி மக்களின் பதற்றம் தணிந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (எ-5)

## நாவலர்...

மேற்கொள்ள வேண்டியுள்ளமையால் நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்திக்கும்–நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி சந்திக்கும் (அப்பையா கடைச் சந்தி இடைப்பட்ட பகுதி வீதி எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 25 ஆம் திகதி வரை பொதுமக்கள் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டு மூடப்பட்டிருக்கும்.

இவ் வீதிவழியாக மேற்கொள்ளப்பட்ட சகல வாகனப் போக்கு வரத்துக்களும் நல்லூர் அரசடி வீதி, கஸ்தூரியார் வீதி வழியாக நகரத்துக்கு பயணிக்குமாறும் மீளவும் அவ்வழியால் வெளியேறுமாறும் அறிவிப்பதுடன் சகல பொது மக்களும் இவ்வறிவித்தலை ஏற்று ஒத்துழைக்குமாறும் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ கேட்டுள்ளார். (ச)

## பிலியந்தலயில் நேற்றிரவு...

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலயில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நேற்று பஸ்ஸினுள் குண்டு வெடித்ததில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 52 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிலியந்தலயில் இருந்து ககபொல செல்வதற்காக பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற போக்குவரத்து சபைக்கு சொந்தமான 61-4170 இலக்க பஸ்ஸினுள்ளேயே குண்டு வெடித்துள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்றிரவு 6.45 மணியளவில் இடம்பெற்றதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பேச்சாளருமான இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திலேயே 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.13 பேர் மருத்துமனைக்கு கொண்டுசெல்லப்படும்வழியில்உயிரிழந்தனர்.

ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். படுகாயமடைந்தவர்கள் பிலியந்தல மற்றும் களுபோவில மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 8 பேர் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்கள் உடனடியாக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக களுபோவில மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்களில் பலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பஸ்ஸின் கூரைப் பகுதி கடுமையாகச் சிதைவடைந்துள்ளது.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற போது மேற்படி பஸ்ஸிற்குள் 90 பயணிகள் வரை இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்தில் படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

அப் பகுதிக்குப் பொதுமக்கள் செல்ல படையினர் தடை விதித்துள்ளனர். அப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. காயமடைந்தவர்களில் ஒரு சிறுவனும் பௌத்த மதகுருவும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இத் தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-2,5)

## மடுப் பகுதியை மீட்டுள்...

யுள்ளதை தனக்குத் தெரிவித்துள்ளதாக மன்னார் ஆயர் இல்ல அதிகாரி கூறியுள்ளார்.

அண்மையில் வன்னிக்குச் சென்ற சர்வ மத அமைப்பு, மடு மாதா ஆலய வளாகத்திலிருந்து வெளியேறுமாறும் மடு வளாகத்தை யுத்த சூனிய வலயமாக பிரகடனப்படுத்துமாறும் கோரி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தது.

இதனையடுத்தே புலிகள் மடு தேவாலயப் பகுதியிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளதாக மன்னார் ஆயர் இல்லம் தெரிவிக்கின்றது. தேவாலயப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகலுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இருக்கவில்லை என தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புலிகள் வெளியேறியிருப்பதை வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதியும் உறுதிப்படுத்தியுள்ளதாக மன்னார் ஆயர் இல்ல அதிகாரி கூறினார்.

இதேவேளை மடுத் தேவாலயப் பகுதியை நேற்றுக் காலை விடுவித்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கை இராணுவத்தின் 8 ஆவது காலாட் படையினர் நேற்று விடுதலைப் புலிகளிடமிருந்து மடு கத்தோலிக்க தேவாலயப் பகுதியை விடுவித்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எந்தவித இடையூறுகளுமின்றி மடுத் தேவாலயப் பகுதிக்குள் படையினர் நேற்றுப் பிரவேசித்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் அப் பகுதிக்குச் சென்றபோது மடுத் தேவாலயத்தின் கூரை ஒன்று சேதமடைந்ததாகவும் ஒரு கட்டடம் முற்றாகச் சேதமடைந்திருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

மடு மாதா தேவாலயப் பகுதியில் காணப்படும் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே சொரூபத்தை வைக்க அனுமதிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ச-2,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.